UNIVERSAL
LIBRARY
OU_208021
UNIVERSAL
LIBRARY

OUP- 8/5 2-12-66—5,000

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 294.45 M96A

Accession No. PGTm 2481

Author Munaipaadiyar

Title Araneri chchaaram.

This book should be returned on or before the date last marked below

முனைப்பாடியார்

இயற்றிய

# அறநெறிச் சாரம்

★

ஆசிரியர்:
சென்னை பச்சையப்பன் கல்லூரி
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்
தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ.

★

விற்பனை உரிமை
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1. திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம். திருச்சி-2.

# PREFACE

ARANERICHARAM is a Jain work of rare merit by one Munaippádiár. The date of the work cannot now be fixed with precision. Some of the stanzas are found in an old poetical anthology, named Purathirattu–also called Prasangábharanam, whose contents range between the age of the Last Academy of Madura and that of Kamban. We may, therefore, only state approximately that it is more than five hundred years old.

Nearly one-third of its contents savours of Jainism, and this is perhaps one reason why the work has been neglected and is not as popular as it deserves to be. The rest can be studied with advantage by any orthodox Tamilian without prejudice to his faith. The earnestness of the author, his easy flow of style, and his pointed metaphors commend themselves to any casual reader. Except that some stanzas are found quoted in Ellis' Kural, and that some stanzas find a place in Pope's Anthology (Seyyul Kalambakam)—and these books are now out of print—no other use seems to have been made of this work.

A few months back Dewan Bahadur V. Krishnama Chariar suggested to me the desirability of publishing the work. I had a manuscript copy of the work transcribed from an old cadjan copy of the late T. Shanmuka Kaviroyar, Tamil Pandit, San Thomé College. This I compared with the two copies available in the Government Manuscript Library. I could not rely upon the readings found in these copies, I could not get any from Sri Pandit Duraisami Devar, the President-Founder of the Tamil Sangam in Madura,—he borrowed my own copy for transcription some years ago. I applied to some Jain scholars in Conjeevaram to spare me a copy for a few days. They refused to comply

with the request. I then requested M. R. Ry. A. Singaravelu Mudaliar Avargal, Senior Tamil Pandit, Govindu Naicker's Middle School, Madras, to lend me his copy. I am much obliged to him, as his copy, from a Jain, was of incalculable service in determining the correct reading of many stanzas which were actually tantalizing me. Nevertheless, the present publication cannot be said to be thorough, as there are about half a dozen stanzas, and even more, still puzzling and defying any attempts to decipher them.

The work, in a chaotic condition as it was, afforded no clue to classification and arrangement. A casual perusal of Arungalacheppu, another Jain work, however, gave the clue, and I was able to find a stanza in Aranericháram, which cleared the difficulty. The work then lent itself readily to the classification now adopted. To facilitate reference to old manuscript copies, I have given the corresponding number of every stanza by its side, without numbering the stanzas in accordance with the present arrangement.

I am prepared to forfeit the copyright—what right have we for works of yore whose authors never had the benefit of any Copyright Act?—and destroy the very few copies now printed, should any other gentleman in possession of better manuscript copies be willing to issue a better edition of the work. It is with this intention—I speak in earnest—that I bring out this edition. Except for the labour—which of course was one of love—and time spent in editing this work for the first time, I admit I shall be making no serious sacrifice in thus forfeiting the so-called right. Alas! we can never redeem the shame of letting slip irrevocably so many of our old literary gems into the cursed stream of Lethe.

*27th January, 1905.* T. C.

# NOTE

THIS reprint of the first edition of 1905 has had the advantage of being compared with a manuscript copy placed at my disposal by my friend Mr. A. Sudarsanam Naynar, Sub-Inspector of Police, Pernamallur, North Arcot District, for which I am much obliged to him.

*15th Feb., 1912.* T. C.

## Preface to the New Impression

The rearrangement of a few stanzas and the addition of explanatory notes and appendices explaining the tenets of Jainism, are the new features of this impression.

T. C.

*15th August, 1919.*

# முகவுரை

திவான்பஹதூர். வ. கிருஷ்ணமாசாரியர் இவ்வறநெறிச் சாரத்தை அச்சிடுகவென என்னை வேண்டினர். திருமயிலை சண்முகக் கவிராய ரவர்களிடம் இருந்த பழைய ஏட்டுப்பிரதியைப் பார்த்து ஏழு வருடங்கட்கு முன்னர் எழுதுவித்த என் பிரதி அச்சிடுதற்காகாத நிலைமையில் இருந்ததனால், சென்னை துரைத்தனக் கையெழுத்துப் பிரதி சாலையிலுள்ள இரண்டு பிரதிகளுடன் அதனை ஒத்திட்டு ஒருவாறு திருத்திக்கொண்டேன் கொண்டும், பல பாக்கள் ஐயநிகழ்ச்சிக்கே இடமாக இருந்தமையால், ஊக்கம் இடையீடு படுகையில், சென்னை கோவிந்து நாயகர் பாடசாலையில் தமிழாசிரியர் ஸ்ரீ ஆ. சிங்காரவேலு முதலியாரவர்கள் தம்மிடத்திருந்த ஒரு சைனருடைய பிரதியை உதவினர். இடையீடுபட்ட ஊக்கத்தை இவ்வுதவி மீண்டும் எழச்செய்தது இது காலத்தாற்செய்த வுதவியாதலின், முதலியாரவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாகிறேன் இநதப் பிரதி பல வழுக்களையும் ஐயங்களையும் களைவதற்கு ஆதாரமாக இருந்தது; இருந்தும், சில பாக்கள் பொருள் இதுவோ அதுவோ எதுவோ எனத் துணியலாகாமல் இருந்தன. அப்பாக்களையும் அறியாமையால் விடுபட்ட வழுக்களையும், பிரதியுடையவர்கள் கண்டுபிடித்து வெளியிடுதல் வேண்டும். அவர்கள் பால் நான் இறுக்கும் தண்டம் இதுவே. அன்னோர் அது செய்து வேறொரு பதிப்பு அச்சிடுவதாயின், என்னிடத்தில் எஞ்சியிருக்கும் அச்சுப்பிரதிகளை அழித்துவிடவும் ஆயத்தமாக இருக்கிறேன். என் பால் அவர்கள் இறுக்கும் தண்டம் இதுவே

இந்நூலினை நாலடியார்போல் பாகுபாடு செய்து அச்சிட எண்ணியிருந்தேன். சில பாக்கள் என் பாகுபாட்டில் அடங்கவில்லை. இங்ஙனமிருக்கையில், வேறு காரியமாக அருங்கலச்செப்பு என்னும் சைனநூலைப் பார்வையிடுகையில், அந்நூலின் பாகுபாடு அறநெறிச் சாரத்துக் கடுத்ததென்று கண்டேன். அந்த நோக்கத்துடன் மீண்டும் இந்நூலைப் பரிசோதிக்கையில், "காட்சியொழுக்கொடு ஞானந் தலை

நின்று" என்னும் பத்தாவது பாவே இந்நூலின் உட்கோளாமெனக் கொண்டு, அதன்படியே பாகுபாடு செய்துவிட்டேன். இங்ஙனம் பாகுபாடு செய்கையில், பாக்கள் முன்னது பின்னும், பின்னது முன்னுமாக இடம் பெயர்தலால், ஏட்டுப்பிரதியின்படி அவ்வப்பாவிற்குரிய எண்ணை அதனதன் பக்கல் காட்டியிருக்கிறேன். பிரதியுள்ளவர்கள் இந்த ஆதாரவைகொண்டு எளிதில் ஒத்திட்டுக்கொள்ளலாம். வேறு பிரதிகளும் உரையும் (உரை சில சைனர்களிடம் இருப்பதாகக் கேள்வி) கிடைக்கிறவரையில் இந்தப் பாகுபாட்டினை முடிந்ததொன்றாகக் கொள்ளல் சாலாது.

பிரஸங்காபரணம் என்னும் புறத்திரட்டில் இந்நூற்பாக்கள் சில உண்டு. புறத்திரட்டில் சங்கச் செய்யுள்கள் முதலாகக் கம்பராமாயணம் நளவெண்பா முதலிய பிற்காலத் திலக்கியங்கள் வரையில் பலநூல்களினின்றும் எடுத்த பாக்களைச் சேர்த்திருத்தலால், அறநெறிச்சாரம் ஐந்நூறு வருடங்களுக்கு முற்பட்ட பழைய நூல் என்பது துணியலாம. நூலின் இறுதியிலுள்ள நாந்தியால் நூலாசிரியர் முனைப்பாடியார் என்பது தெளிவு.

முதலில் தெய்வவணக்கம் ஒன்றும், இறுதியில் நூற்பயன் இரண்டும், நாந்தி ஒன்றும் நீங்க, இந்நூலில் 222 வெண்பாக்கள் உள்ளன. அருகக்கடவுளும் அருகசமயமும் அருகவாகமமும் சிறப்பாகக் கொண்டுரைக்கும் வெண்பாக்கள் நீங்க, அறமும் ஒழுக்கமும் முதலியன கூறும் ஏனைப்பாக்கள் செம்பாகமாய்ச் சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகு வாய்ந்து சமயசூத்திரமின்றி எல்லோரும் மேற்கொள்ளத்தக்கனவாக இராநின்றன. பல பாடல்களில் உருவக முகத்தான் விளக்கியிருக்கும் கருத்துக்கள் பசுமரத்தில் அறைந்த ஆணி போல மனத்தில் வேரூன்றி நிலைக்கும் செவ்வியவாய்ந்துள்ளன.

பிரம்பூர்,
1905ஆ ஜனவரீ 27உ

தி. செ.

✱

# அறநெறிச்சாரம்

## பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| தற்சிறப்புப்பாயிரம். | | |
| பாயிரம்—அறவுரை கேட்டல் | .... .... .... .... | 11 |
| அறம் உரைப்பவன் | .... .... .... .... | ,, |
| கேட்பான் | .... .... .... .... | 12 |
| உரைக்கப்படுவது | .... .... .... .... | ,, |
| உரைத்ததனாலாயபயன் | .... .... .... | 13 |
| நூலின் உட்கோள் | .... .... .... .... | ,, |
| அறம் — அறத்தினியல்பு | .... .... .... .... | 14 |
| அறத்தின் சிறப்பு | .... .... .... .... | ,, |
| இளமையில் அறஞ்செய்தல் | .... .... .... | ,, |
| அறவுரையால் பயனெய்தார் | .... .... .... | 17 |
| பொது | .... .... .... .... .... | ,, |
| அறமுரைப்பார் உரைக்கும் ஆறு விஷயங்கள். | | |
| 1 தலைமகன் | .... .... .... ... | 18 |
| 2. நூல் | .... .... .... .... .... | 19 |
| 3. முனி | .... .... .... .... .... | ,, |
| 4 பொருள் | .... .... .... .... | 20 |
| 5 தொலைவின்றுணிவு | .... .... .... | ,, |
| 6. பக்கம் | .... .... .... .... .... | 21 |
| நற்காட்சி. | | |
| அவ்விநயமாறு | .... .... .... .... | 22 |
| மும்மூடம் 1. உலகமூடம் | .... .... .... | 23 |
| 2. பாசண்டிமூடம் | .... .... | ,, |
| 3. தேவமூடம் | .... .... .... | 24 |

பக்கம்.

எண்மயம் .... .... .... .... .... 24
சினங்கடிதல் ... .... .... .... .... ,,
எட்டுறுப்பு .... .... .... .... .... 25

நல்லொழுக்கம்.

ஒழுக்கம் .... .... .... .... .... 26
கற்றவழியில் நிற்றல் .... .... .... .... ,,
அடக்கம் .... .... .... .... .... 27
பொறை .... .... .... .... .... ,,
இன்னு செய்யாமை .... .... .... .... 28
புறங்கூறுமை .. .... .... .... .... ,,
மதுபானம் .... .... .... .... .... ,,
சூது .. .... .... .... .... .... ,,
மானம் .... .... .... .... .... 29
காமம் .... .... .... .. .... ,,
நட்பு .. .... .... .. .... .... ,,
புலான் மறுத்தல் .... .... .... .... 31
பொது .... .... .... .... .... ,,

நன்ஞானம்.

நிலையாமை .... .... .... .... .... 33
தூய்தன்மை .... .... .... .... .... 36
புலனடக்கல்.... .... .... .... .... ,,
ஊழ் .. .... .... .. .... .... 38

மனைவாழ்க்கை.

நற்பெண்டிர்.... .... .... .... .... 40
தீப்பெண்டிர் .. .... .... .... .... 41
இல்வாழ்க்கை .. .... .... .... .... ,,
ஈகை .. .... .... .... .... .... 42

வீட்டுலகமெய்தல். .... .... .... .... .... 45
பொது. .... .... .... .... .... .... 49
இந்நூற்பயன். .... .... .... .... .... 50

# அறநெறிச்சாரம்

## தற்சிறப்புப் பாயிரம்.

தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை—நாவின்
துதித்தீண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற
விரிப்பன் சுருக்காய் விரைந்து.

தா—குற்றம்

தாமரைப்பூவினமேற்சென்றான்—பூமிசை நடந்தோனா, அருகன

பா—பே —"விதைப்பன்"

## பாயிரம்.

### அறவுரை கேட்டல்.

மறவுரையும் காமத் துரையும் மயங்கிப்
பிறவுரையும் மல்கிய ஞாலத்—தறவுரை
கேட்கும் திருவுடை யாரே, பிறவியை
நீக்கும் திருவுடை யார்.

உரைப்பவன் கேட்பான் உரைக்கப் படுவ
துரைத்ததனு லாய பயனும்—புரைப்பின்றி
நான்மையும் போலியை நீக்கி, அவைநாட்டல்
வான்மையின் மிக்கார் வழக்கு. (2)

வான்மை—வாய்மை. புரைப்பு—குற்றம்.

### உரைப்பவன்.

அறங்கேட் டருள்புரிந் தைம்புலன்கண் மாட்டும்
இறங்கா திருசார் பொருளும்—துறந்தடங்கி,
மன்னுயிர்க் குய்ந்துபோம் வாயி லுரைப்பானேல்,
பன்னுதற்குப் பாற்பட் டவன். (3)

பிள்ளைபேய் பித்தன் பிணியாளன் பின்னோக்கி
வெள்ளை களிவிடமன் வேட்கையான்—தெள்ளிப்
புரைக்கப் பொருளுணர்வா ரென்றிவரே, நூலை
உரைத்தற் குரிமையிலா தார். (4)

இச்செய்யுள ஜீவஸம்போதனை என்னும் ஜைநநூலில் அநித்தியமென்னு முதலதிகாரத்தில் (29-வது செய்யுள்) இவ்விதமாகவே அமைந்திருக்கின்றது இதன் பொருள் பின் வருமாறு எழுதியிருக்கின்றது "பாலனும் பேய்கொண்டானும் பித்தனும் வியாதியாளனும் தனமோகியும் அடக்கமிலாதானும் களிப்பானும் கடுவிஷமனும் வேட்கையானும் தோஷக்கிராகியும் என்றிச் சொல்லப்பட்டாரியாவரும தாமமுரைத்தற் குரியரல்லா உபசமரும் க்ஷமாபரரும . சமத்துவிபாவமுடையாரும் தர்ம முரைத்தற் குரியர் என்றவாறு"

## கேட்பான்.

நன்சொல்லே மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்
புன்சொல்லே போதரவு பார்த்திருப்பான்—இன்சொல்லை
என்றிருந்துங் கேளாத வேழை எனவிவர்கட்
கான்றவர்கள் கூறா ரறம். (5)

தண்டி—மாணி. போதரவு—பேணல.

நடுமாற்ற மஞ்சுவான் தன்னை யுவர்ப்பான்
வடுமாற்ற மஞ்சித்தற் காப்பான்—படுமாற்றால்
ஒப்புரவு செய்தாண் டுறுதிச்சொற் சேர்பவன்,
தக்கான் றரும வுரைக்கு. (6)

உவர்ப்பான்—வெறுப்பவன்

ஆவட்டை போன்றறியா தாரை மயக்குறுத்திப்
பாவிட்டார்க் கெல்லாம் படுகுழியாய்க்—காவிட்
டிருமைக்கு மேமம் பயவா வெனவே
தருமத்துப் போலிக டாம். (7)

பா—பே:—'பாவிட்டற்கெல்லாம்'

## உரைக்கப்படுவது.

வினையுயிர் கட்டுவீ டின்ன விளக்கித்
தினையனைத்துந் தீமையின் றாகி—நினையுங்கால்
புல்லறத்தைத் தேய்த்துலகி னோடும் பொருந்துவதாம்,
நல்லறத்தை நாட்டு மிடத்து (8)

## உரைத்தலாயபயன்.

புல்ல வுரைத்தல் புகழ்தல் பொருளீதல்
நல்ல ரிவரென்று நட்பாடல்—சொல்லின்
அறங்கேள்வி யாலாம் பயனென் றுரைப்பா,
மறங்கேள்வி மாற்றி யவர். (9)

---

## நூலின் உட்கோள்.

காட்சி யொழுக்கொடு ஞானந் தலைநின்று,
மாட்சி மனைவாழ்த லன்றியு—மீட்சியில்
வீட்டுலக மெய்தல் எனவிரண்டே, நல்லறங்
கேட்டதனு லாய பயன். (10)

“நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந், தொகக வறச்சொற் பொருள்” என்பது அருங்கலச்செப்பு. திருநூற்றந்தாதி 24-வது செய்யுள் “மன்னுயிர்கருப் பரத்திரயங்கள் பணித்தபிரான” என்புழி, பரத்திரயம் மேலான ரத்நத்ரயம்: அவை ஸம்யக்தர்சனம் ஸமயக்ஜ்ஞானம் ஸம்யக் சாரித்ரம் என்பன என உரைக்கின்றது

### சீவக சிந்தாமணி

“உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்
தெள்ளிதின் அப்பொருள் தெளிதல் காட்சியாம்
விள்வற இருமையும் விளங்கத் தன்னுளே
ஒள்ளிதின் தரித்தலை ஒழுக்கம் என்பவே”

“கூடிய மும்மையும் சுடர்ந்த கொந்தழல்
நீடிய வினைமரம் நிரைத்துச் சுட்டிட
வீடெனப் படும்வினை விடுதல் பெற்றதங்
காடெழில் தோளினுய் அநந்த நான்மையே”

என்றுரைக்கின்றது.

# அறம்

## அறத்தினியல்பு.

*மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம்.* (176)

*செம்மையொன்றின்மை—பக்ஷபாதமின்மை. திறம்பா—மாறுபடாத.*

## அறத்தின் சிறப்பு

*தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி
இனத்துள் இறைமையுஞ் செய்து—மனக்கினிய
போகந் தருதலால், பொன்னே! அறத்துணையோ
டேகமா நண்பொன்று மில்* (159)

*பா—பே.—"தனக்கினிய" இறைமை—தலைமை*

*ஈட்டிய வொண்பொருளும் இல்லொழியும்: சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்:—மூட்டும்
எரியின் உடம்பொழியும. ஈர்ங்குன்ற நாட!
தெரியின் அறமே துணை* (147)

*காட்டுவாய—இடுகாட்டில்*

*நோற்பவ ரில்லவர்க்குச் சார்வாகி, இல்லவரும்
நோற்பவர்க்குச் சார்வா யறம்பெருக்கி,—யாப்புடைக்
காழுங் கிடுகும்போல் நிற்கும், கயக்கின்றி
ஆழிசூழ் வையத் தறம்* (84)

*கிடுகு—சட்டப்பலகை கயக்கு—சோர்வு*

## இளமையி லறஞ்செய்தல்.

*இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர்ப் பாய்ச்சி அறக்கதி ரீன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.* (112)

*அட்டி—சொரிந்து. "அறபைங்கூ ழாக்குவார்க், கென்று மிடும்பை யில" என்பது புறத்திரட்டில் கண்ட பாடபேதம் 'இனுமோர்'—பாடபேதம்.*

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்.—மாலைக்
கிடந்தான் எழுதல் அரிதால்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு? (67)

எழுதல்—மறுநாள் காலையில் எழுதல்.

சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்:
நின்றநாள் யார்க்கும் உணர்வரி—தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம். (69)

உலப்ப—ஒழிய

கோட்டுநா ளிட்டுக் குறையுணர்ந்து வாராதால்;
மீட்டொரு நாளிடையுந் தாராதால்;—வீட்டதற்கே
வஞ்சஞ்செய் கூற்றம் வருதலால், நன்றாற்றி
அஞ்சா தமைந்திருக்கற் பாற்று (109)

கோட்டு நாள்—எழுதியநாள், விதித்தகாலம். வீட்டுதல்—கொல்லுதல் அமைந்திருக்கற்பாற்று—அமைந்திருத்தலே கடமையாம்

இன்றுளார் இன்றேயும் மாய்வர்; அவருடைமை
அன்றே பிறருடைமை யாயிருக்கும்—நின்ற
கருமத்த ரல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமந் தலைநிற்றல் நன்று. (111)

மின்னு மிளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை அறிவென்றல் பேதைமை—தன்னைத்
துணித்தாலுந் தூங்கா தறஞ்செய்க. கூற்றம்
அணித்தாய் வருதலு முண்டு. (106)

மின்னும்—பிரகாசிக்கும். துணித்தாலும்—வருத்தியும்.
"பின்னும்"—பிரதிபேதம்

மூப்பொடு தீப்பிணி முன்னுறீஇப் பின்வந்து
கூற்ற வரசன் குறும்பெறியும்—ஆற்ற
அறவரண மாராய்ந் தடையினல் லதல்லால்
பிறவரணம் இல்லை யுயிர்க்கு. (105)

குறும்பு எறியும்—அரணை அழிக்கும். அறவரணம்—அறமாகிய கோட்டை.

திருத்தப் படுவ தறக்கருமம் தம்மை
வருத்திய மாண்புடையார் செய்க,—பெருக்க
வரவும் பெருங்கூற்றம் வன்கண் ஞமன்கீழ்த்
தாவறுத்து மீளாமை கண்டு. (107)

தாவு—தலைவன் கட்டளை.

முன்னே ஒருவன் முடித்தான்றன் றப்பெலாம்.
என்னே ஒருவன் இகழ்ந்திருத்தல்?—முன்னே
முடித்த படியறிந்து, முன்முன் அறத்தைப்
பிடிக்க பெரிதாய் விரைந்து. (114)

குறைக்கருமம் விட்டொரீஇப் பிற் கொள்ள உலவா
அறக்கருமம் ஆராய்ந்து செய்க.—பிறப்பிடைக்கோ
நெஞ்சேமாப் பில்லாதான் வாழ்க்கை, நிரயத்துத்
துஞ்சாத் துயரந் தரும். (65)

உலவா—குறையாத. நெஞ்சேமாபபு—மனக்களிப்பு.

அறம்புரிந் தாற்றுவ செய்யாது நாளும்
உறங்குதல் காரண மென்னை?—மறந்தொருவன்
நாட்டு விடக்கூர்தி அச்சிறுங் காலத்துக்
கூட்டுந் திறமின்மை யால். (167)

விடக்கு—மாமிசம் விடக்கூர்தி—உடல்.

பாவம் பெருகப் பழிபெருகத் தன்னோம்பி
ஆவதொன் றில்லை. அறனழித்துப்—பாவம்
பொறாஅ முறைசெய் பொருவில் ஞமன்கீழ்
அறாவுண்ணும் ஆற்றவு நின்று. (108)

முற்செய் வினையின் பயன்றுய்த் ததுவுலந்தால்
பிற்செய் வினையின்பின் போகலால்,—நற்செய்கை
ஆற்றுந் துணையும் அறமறவேல், நன்னெஞ்சே!
கூற்றங் குடில்பிரியா முன். (185)

உலந்தால்—ஒழிந்தால். குடில்—சரீரமாகிய குடில்.

இரையவித்து நீராட லாகா. உரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொல் இல்லை.—அரைசராய்ச்
செய்தும் அறமெனினும் ஆகா துளவரையால்
செய்யுமிசை ஆகுக் கிரு. (66)

## அறவுரையால் பயனெய்தார்.

நல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றொன்றும் அறனுணர்தல்.—நல்லாய்!
நறுநெய் நிறைய முகப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரு மாறு? (55)

மூழை- அகபபை.

வைகலு நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்—அஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு. (51)

பா—பே —"கலலெனும்"

கயத்திடை உய்த்திடினும் கன்னனையா தென்றும்.
பயற்றுக் கறிவேவா தற்றால்.—இயற்றி
அறவுரை கேட்ட விடத்தும் அனையார்
திறவுரை தேறா தவர் (50)

கயம—குளம்

## போது.

அற்ற பொழுதே அறநினைத்தி: யாதொன்றும்
பெற்ற பொழுதே பிறநினைத்தி.—எற்றே
நிலைமையில் நன்னெஞ்சே! நின்னொடு வாழ்க்கை?
புலைமயங்கி யன்ன துடைதது. (184)

பா—பே:—"நினைந்தியாதொனறும்"

ஒருபால் திருத்த வொருபால் கிழியும்
பெருவாழ்க்கை முத்தாடை கொண்ட—திருவாளா!
வீணாள் படாமைநீ துன்னம்பெய் யேயாக
வாணாள் படுவ தறி. (116)

துன்னம்—தைததல் 'துன்னும் பெயயேயால்'—பாடபேதம்.

உள்ளநா ணல்லறஞ் செய்கென்னுஞ் சாற்றன்றோ
டில்லைகாட் பேயென் றிடங்கடிந்து—தொல்லை
இடைக்கடையு மாற்றார் இறந்தார்க்கு நின்றார்
கடைத்தலைவைத் தீயும் பலி. (70)

பா—பே —'சாத்தன்றோ.'

ஒருநாளு நீதரியாய் உண்ணென்று சொல்லி
இருநாளைக் கீந்தாலும் ஏலாய்.—திருவாளா!
உன்னோ டுறுதி பெரிதெனினும் இவ்வுடம்பே
நின்னோடு வாழ்தல் அரிது. (158)

கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடும். அதுபோலும்—ஒட்டிய
காட்சி திரியின் அறந்திரியும் என்றுரைப்பர்
மாட்சியின் மிக்கவர் தாம். (56)

கட்டளை — செங்கல்லச்சு. இட்டிகை — செங்கல. காட்சி—நற்காட்சி

## அறமுரைப்பார் உரைக்கும் ஆறு விஷயங்கள்.

தலைமகனு நூலு முனியும் பொருளும்
தொலைவின் றுணிவொடு பக்கம்—மலைவின்றி
நாட்டியிவ் வாறும் உரைப்பரே, நன்னெறியைக்
காட்டி அறமுரைப் பார். (29)

தொலைவு—அழிவு பக்கம்—பக்ஷம—side—party.

"தலைமகனு நூலு முனியுமிம் மூன்றும், நிலைமைய தாகும் பொருளா" என்றது அருங்கலச்செப்பு

### தலைமகன்.

["குற்றமொன் றின்றிக் குறைவின் றுணர்ந்தறம், பற்ற வுரைத்தா னிறை" "தெறித்த பறையின் இராகாதி யின்றி, உரைத்தான் இறைவ னறம்."—அருங்கலச்செப்பு.]

இறந்தும் பெரியனா லெம்மதே தெய்வம்
அறந்தானு மிஃதேசென் றுற்றத்—துறந்தார்க
டம்பாலே வாங்கி யுரைத்ததனுல் ஆராய்ந்து
நம்புக நல்ல வறம். (23)

ஒன்றோடொன் றொவ்வாத பாசண்டத் துள்ளெல்லாம்
ஒன்றோடொன் றொவ்வாப் பொருடெரிக்—தொன்றோடொன்
றொவ்வா வுயிரோம்பி உட்பேய்மை பெற்றதே
அவ்வாய தாகும் அறம். (24)

## நூல்.

["மெய்ப்பொருள் காட்டி உயிர்கட் கரணாகித், துக்கங் கெடுப்பது நூல்."
"என்றுமுண் டாகி இறையால் வெளிப்பட்டு, நின்றது நூலென்றுணர்"—அருங்கலச்செப்பு.]

நிறுத்தறுத்துச் சுட்டுரைத்துப் பொன்கொள்வான் போல,
அறத்திறனும் ஆராய்ந்துள் புக்கால்,—பிறப்பறுக்கும்
மெய்ந்நூல் தலைப்பட லாகுமற் றாகாதே
கண்ணோடிக் கண்டதே கண்டு. (21)

உரைத்து—உரைகல்லில் அல்லது உரையாணிபால் உரைத்து.

நாய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே.—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும்: உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (22)

## முனி.

["இந்தியத்தை வென்றான தொடர்ப்பாட்டோ டாரம்ப, முந்து துறந்தான் முனி" "தத்துவ ஞான நிகழ்ச்சியுஞ் சிந்தையு, முய்த்த விருடிகண் மாண்பு"—அருங்கலச்செப்பு]

துறந்தார் துறந்தில ரென்றறிய லாகும்.
துறந்தவர் கொண்டொழுகும் வேடம்—துறந்தவர்
கொள்ப கொடுப்பவற்றாற் காணலாம். மற்றவர்
உள்ளம் கிடந்த வகை. (25)

பா—பே:—"என்றறியலாகா"

விந்தியக் கொல்கா விருமுத் தொழில்செய்தல்
சிந்தைதீ ரப்பியத்தின் மேலாக்கல்—பந்தம்
வருவா ரிவையெய்து மாறொழுகு வார்க்கே
உரிதாகும் உம்ப ருலகு. (26)

விந்து—இந்திரியம் அப்பியம்—அவ்வியம்—தேவர்க்கிடப்படுவது.

அழலடையப் பட்டான் அதற்குமா றாய
நிழலாதி தண்ணியல்பே நாடும்—அழலதுபோற்
காமாதி யாலாங் கடுவினைக் கட்டழித்துப்
போமாறு செய்வார் புரிந்து. (27)

பா—பே:—'கடுவினைக் கட்டறுத்து'

வெப்பத்தா லாய வியாதியை வெல்வதூஉம்
வெப்பமே என்றார் விதியறிவார்.—வெப்பந்
தணிப்பதூஉம் தட்பமே: தான்செய் வினையைத்
துணிப்பதூஉம் தூய வொழுக்கு. (28)

## பொருள்.

தத்தம இட்டந் திருட்ட மெனவிவற்றோ
டெத்திறத்து மாறாப் பொருளுரைப்பர்—பித்தரவர்
நூல்களும் பொய்யேஅந் நூலவிதியி னேற்பவரும்
மால்கள் எனவுணரற் பாற்று. (30)

குருட்டுச் செவிடர்கள் கோல்விட்டுத் தம்முள்
தெருட்டு வழிசொல்லிச் சேறல்,—திருட்டேட்டம்
மாறு கொளக்கிடந்த மார்க்கத்தால் நற்கதியில்
ஏறுதும் என்பா ரியல்பு. (31)

திருட்டேட்டம்—திருட்டம இட்டம்

## தொலைவின்றுணிவு.

அற்றறியுங் காரணத்தை ஆராய்ந் தறவுரையைக்
கற்றறிந்த மாந்தர் உரைப்பவே.—மற்றதனை
மாட்சி புரிந்த மதியுடை யாளரே
கேட்பர் கெழுமி யிருந்து. (32)

உருவும் ஒழுக்கமு நூலும் பொருளும்
பொருவிற் றலைமகனோ டின்ன—ஒருவாது
கண்டு கருதிக் கயக்கறத் தேர்ந்தபின்
கொண்டுவீ டேற்க வறம். (33)

பா—பே.—'கயக்கறுத் தொத்தபின்'. கயக்கு—சோர்வு

நூலுணர்வு நுண்ணொழுக்கங் காட்டுவிக்கும் நொய்யவாம்.
சால்பின்மை காட்டுமே சவர்ச்செய்கை.—பால்வகுத்துப்
பட்டிமையா லாகா பரமார்த்தம். பற்றின்மை
ஓட்டுவா னுய்ந்துபோ வான். (34)

சவர்—சவர்நிலம். பட்டிமை—வஞ்சகம்

## பக்கம்.

புனைபடை கொண்டஞ்சித் தற்காப்பான் றன்னை
வினைகடியு மென்றடி வீழ்தல்,—கனையிருட்கண்
பல்லெலி தின்னப் பறைந்திருந்த பூனையை
இல்லெலி காக்குமென் றற்று. (35)

பறைதல்—சொல்லல.

மாடமு மண்ணீடுங் கண்டடக்க மில்லாரைக்
கூடி வழிப்படுங் கோறமை—ஆடரங்கின்
ஏவகமாய் நின்றாரோர் கூத்தனை ஊர்வேண்டிச்
சேவகமாய் நின்ற துடைத்து. (36)

மண்ணீடு—மூடுசாந்திட்ட வீடு

நாற்றமொன் றில்லாத பூவொடு சாந்தினை
நாற்றந்தான் வேண்டி யதுபோலும்,—ஆற்ற
மறுவறு சீலமு நோன்புமில் லாரை
உறுபயன் வேண்டிக் கொளல். (37)

நாற்றம்—வாசனை

மால்கடல்சூழ் வையத்து மையாதாங் காத்தோம்பிப்
பாலகருதி யன்ன துடைதடுதன்பா,—மேல்வகுத்து
மன்னிய நற்குண மில்லாரைத் தாமபோற்றிப்
புண்ணியங் கோடு மெனல் (38)

மையா—மலட்டுப்பசு.

உடங்கமிழ்தங் கொண்டா னொருவன் பலரும்
விடங்கண்டு நன்றிதுவே யெனாருல்,—மடங்கொண்டு
பல்லவர் கண்டது நன்றென் றமிழ்தொழிய
நல்லவனும் உண்ணுமோ நஞ்சு. (39)

உடங்கு—கூடிநிற்கை.

அருள்வட்ட மாக வறிவு கதிராய்ப்
பொருள்வட்ட மெல்லாம் விளக்கி—இருள்வட்டம்
மாற்றும் அறிவான ஞான வளரொளியான்
வேற்றிலிங்கர் தோன்றும் வெளிறு. (40)

தன்னையும் தன்னிற் பொருளையும் பட்டாங்கிற்
பன்னி யறமுரைக்க வல்லாரை—மன்னிய
சிட்ட ரெனச்சிட்டன் றேற்றுவ தல்லாரைச்
சிட்டரென் றேத்தல் சிதைவு. (41)

"சிட்டரென்ன சிட்டரென் றேத்துவரல்லாரை"—பா—பே.

எத்துணை கற்பினும் ஏகாந்த வாதிகள்
புத்தியும் சொல்லும் பொலிவிலவாய்—மிக்க
அறிவனால் கற்றா ரலவெனவே நிறகும்,
எறிகதிர்முன் நீள்சுடரே போன்று. (42)

# I. நற்காட்சி.

["மெய்ப்பொரு டேறுதல் நற்காட்சி யென்றுரைப்பா, எப்பொருளுங் கண்டுணர்ந் தார்"—அருங்கலச்செப்பு.]

அவ்விநய மாறும் மும்மூடம் எண்மயமும்
செவ்விதி னீக்கிச் சினங்கடிந்து—கவ்விய
எட்டுறுப்பி னாய இயல்பினற் காட்சியார்
சுட்டறுப்பர் நாற்கதியிற் றுன்பு. (11)

## அவ்விநயமாறு.

[அவ்விநயம் — விநயமல்லாதது "நல்வினையிற் றீர்ந்த வணக்கத்தை நல்லோர்கள், சொல்லுவர் அவ்விநய மென்று."—அருங்கலச்செப்பு ]

அச்சமே ஆசை உலகிதம் அன்புடைமை
மிக்கபா சண்டமே தீதெய்வ—மெச்சி
வணங்குதல் அவ்விநயம் என்பவே மாண்ட
குணங்களிற் குன்றா தவர். (12)

உலகிதம்—லௌகிகம். தீத்தெய்வம்—மித்தியா தேவதை.

மன்ன னுடன்வயிறு மாண்புடைத் தாய்தந்தை
முன்னி முடிக்கு முனியாசான்—பன்னியங்
காய குரவர் இவரென்ப வையத்துத்
தூய குலஞ்சாதி யார்க்கு. (13)

## மும்மூடம்.

[மும்மூடம்—உலகமூடம், பாசண்டிமூடம், தேவமூடம். மூடம்—மயக்கு.]

### (1) உலகமூடம்

["வரைபாய்த றீப்புகுத லாறாட லென்ன, உரைப்பின் உலக மயக்கு."—அருங்கலச்செப்பு.]

மாமாங்க மாடல், மணற்குவித்தல், கல்லிடுதல்,
தாமோங் குயர்வரைமேற் சாவீழ்தல்,—காமங்கொண்
டாடோ டெருமை யறுத்தல் இவையுலக
மூடம் எனவுணரற் பாற்று. (14)

சாவீழ்தல்—சாவவீழ்தல், சாகும்படி வீழ்தல.

கண்டதனைத் தேறா தவனும், கனாக்கண்டு
பெண்டிரைப் பேதுற்றுக் கொளன்றானும,—பண்டிதனாய்
வாழ்விப்பக் கொண்டானும் போல்வரே, வையத்துக்
கோள்விற்பக் கொள்ளாநின் றார். (15)

பேதுற்று—மதிமயங்கி.

### (2) பாசண்டிமூடம்.

["மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல், பாசண்டி மூடமெனல்"—அருங்கலச்செப்பு.]

தோல்காவி சீரைத் துணிகீழ் விழவுடுத்தல்
கோல்காக் கரகங் குடைசெருப்பு—வேலொடு
பல்லென்பு தாங்குதல் பாசண்டி மூடமாய்
நல்லவரால் காட்டப் படும். (16)

ஆவரண மின்றி அடுவாளும், ஆனைதேர்
மாவரண மின்றி மலைவானும்,—நாவில்
கழுதை யிலண்டஞ் சுமந்தானும் போலப்
பழுதாகும் பாசண்டி யார்க்கு. (17)

* ஆவரணம்—சீலை—மறைவு.

## (3) தேவமூடம்

["வாழ்விப்ப தேவ ரெனமயஙகி வாழத்துதல, பாழ்பட்ட தேவ மயக்கு"
"மயககாாவஞ் செற்ற முடையாரை ஏததல, துயககுடைத தேவ மயககு".—அருஙகலசசெப்பு ]

*சக்கரன் நான்முகன் சங்கரன் பூரணன்*
*புத்தன் கபிலன் கணாதனென்—றெத்திறத்*
*தேகாந்த வாதிக ளெண்கேட்ட ஆதன்போல்*
*ஆகாதாம் ஆத்தன் றுணிவு* (18)

ஆதன்—பேதை. ஆத்தன—அருகன.

## எண்மயம்.

[எண்மதம—எண்வகைச செருககு "பிறபபுக குலமவலி செலவம வனப்புச், சிறப்புத் தவமுணாவோ டெட்டு" "இவறருற பெரியோ மியாமென றெழுந்தே, இகக்கி லிறக்கு மறம்"—அருஙகலச்செப்பு. பிறப்பு—தாய் வமிசம் குலம-தகப்பன வமிசம். வலி—பராககிரமம். செலவம்—ஐசுவரியம வனப்பு—அழகு. சிறபபு—பூச்சியம்.]

*அறிவுடைமை மீக்கூற்றம் ஆன குலனே*
*உறுவலி நற்றவ மோஙகிய செல்வம்*
*பொறிவனப்பின் எம்போல்வா ரில்லென்னும் எட்டும்*
*இறுதிக்கண் ஏமாப் பில.* (19)

மீககூற்றம--புகழ்சசி

## சினங்கடிதல்.

*உழந்துழந்து கொண்ட வுடம்பினைக் கூற்றுண்ண*
*இழந்திழந் தெங்கணுந் தோன்றச்—சுழன்றுழன்ற*
*சுற்றத்தா ரல்லாதா ரில்லையால் நன்னெஞ்சே!*
*செற்றத்தாற் செய்வ துரை.* (102)

*உயிரு முடம்பும் பிரிவுண்மை யுள்ளிச்,*
*செயிருஞ் சினமுங் கடிந்து,—பயிரிடைப்*
*புற்களைந்து நெற்பயன் கொள்ளு மொருவன்போல்,*
*நற்பயன் கொண்டிருக்கற் பாற்று.* (178)

பாற்று—தகுதி.

## எட்டுறுப்பு

["எட்டு வகையுறுப்பிற் ருகி யியன்றது, சுட்டிய நற்காட்சி தான்"—அருங் கலசெப்பு.]

ஐயம் அவாவே உவர்ப்பு மயக்கின்மை
செய்பழி நீக்க னிறுததுதல்—மெய்யாக
அன்புடைமை ஆன்ற அறவிளக்கஞ் செய்தலோ
டென்றிவை யெட்டாம் உறுப்பு (20)

பா—பே.—செய்யபழி நீக்கி நிறுததுதல். உவாப்பு—வெறுப்பு.

நற்காட்சியின் சிறப்பு அருங்கலச்செப்பில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது

காட்சி விசேடம் உணர்வும் ஒழுக்கமும்
மாட்சி யதனிற் பெறும்.
நற்காட்சி யில்லார் உணர்வு மொழுக்கமும்
ஒற்கா ஒசிந்து கெடும்.
நாட்சியொ டொப்ப தியாங்காணேம் வையத்து
மாட்சி யுடைய துயிர்க்கு.
விரத மிலரெனினும் காட்சி யுடையார்
நரகம் புகுத விலா.
நலங்கவில் காட்சி யுடையார் உலகில்
விலங்காய்ப் பிறத்த விலர்
பெண்டிர் நபுஞ்சக ராகார் பிழைப்பின்றிக்
கொண்டநற் காட்சி யவர்.
இழிகுலத் தென்றும் பிறவார் இறைவன்
பழுதறு காட்சி யவர்.
உறுப்பிற் பிறர்பழிப்ப என்றும் பிறவார்
மறுப்பாடில காட்சி யவர்.
குறுவாழ்க்கை நோயொடு நல்குரவு கூடப்
பெறுவாழ்க்கை யுட்பிறத்த வில்.
அரச ரிளவரசர் செட்டியரு மாவர்
புரைதீர்ந்த காட்சி யவர்.
விச்சா தரரும் பலதே வருமாவர்
பொச்சாப்பில் காட்சி யவர்.
முச்சக் கரத்தொடு சித்தியு மெய்துவர்
நச்சறு காட்சி யவர்.

## II. நல்லொழுக்கம்.

### ஒழுக்கம்.

மக்க ளுடம்பு பெறற்கரிது; பெற்றபின்
மக்க ளறிவும் அறிவரிது.—மக்கள்
அறிவ தறிந்தா ரறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார். (212)

'அறிவதறிந்தாரெனபா ரறத்தின் வழுவா' என்பது புறத்திரட்டிற் கண்ட பிரதி பேதம்.

பிறந்த விடநினைப்பிற் பேர்த்துள்ள லாகா
மறந்தேயு மாண்பொழியு நெஞ்சே!—சிறந்த
ஒழுக்கத்தோ டொன்றி யுயப்போதி யன்றே.
புழுக்கூட்டுப் பொச்சாப் புடைத்து. (182)

### கற்றவழியில் நிற்றல்.

தேசும் திறனறிந்த திட்பமும் தேர்ந்துணர்ந்து
மாசு மனத்தகத் தில்லாமை—ஆசின்றிக்
கற்றல் கடனறிதல் கற்ற றினைத்தராய்
நிற்றல் வரைத்தே நெறி. (127)

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை,—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். (142)

கற்றதுவுங் கற்றொருபா னிற்பக், கடைப்பிடியு
மற்றொருபால் போக, மறித்திட்டுத்—தெற்றென
நெஞ்சத்துட் டீமை யெழுதருமேல், இன்னுதே
கஞ்சத்துட் கற்பட்டாற் போன்று. (123)

கஞ்சம்—அப்பவருக்கம்.

விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை நீக்கிக்
கதிப்பட்ட நூலினைக் கையிகந் தாக்கிப்
பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்,
மதிப்புறத்திற் பட்ட மறு (162)

பற்றொடு செற்றம் பயமின்றிப் பல்பொருளும்
முற்ற வுணர்ந்தான் மொழிந்தன—கற்றும்
கடையாய செய்தொழுகும் காரறிவி னாரை
அடையார் அறிவுடை யார். (156)

நல்வினைப்பி னல்லால், நறுந்தா மரையாளும்
செல்லாள் சிறந்தார்பி னாயினும்—நல்வினைதான்
ஒத்து மொழுக்கமுந் தானமும் உள்வழி
நீத்தல் ஒருபொழுது மில். (124)

தன்னிற் பிறிதில்லை தெய்வ நெறிநிற்பில்.
ஒன்றானுந் தானெறி நில்லானேல்,—தன்னை
இறைவனாச் செய்வானுந் தானேதான்: தன்னைச்
சிறுவனாச் செய்வானுந் தான். (172)

அஞ்சினா யேனு மடைவ தடையுங்காண்;
துஞ்சினா யென்று வினைவிடா.—நெஞ்சே!
அழுதா யெனக்கருதிக் கூற்றொழியா. தாற்றத்
தொழுதேன் நிறையுடைமை யாகு. (189)

## அடக்கம்.

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (43)

'அலர்கதிர் ஞாயிற்றைக் குடைகாக்குஞ் சிலகற்றார் கண்ணுமுளவாங் கதிரொளிபோற் பலகற்றார்க்' என்பது ஒரு பிரதியிற் கண்ட பாட பேதம்.

## பொறை.

தன்னை யொருவன் இகழ்ந்துரைப்பின் தானவனைப்
பின்னை யுரையாப் பெருமையான்—முன்னை
வினைப்பயனு மாயிற்றா மென்றதன்கண் மெய்ம்மை
நினைத்தொழிய நெஞ்சினோ யில் (96)

எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னு நீரால் அவித்தொழுக லாற்றின்,
பிறிதெனினும் வேண்டா தவம். (101).

நம்மைப் பிறர்சொல்லும் சொல்லிவை, நாம்பிறரை
என்னாது சொல்லு மிழுக்கிவை யென்றெண்ணி,
உரைகள் பரியா துரைப்பாரில் யாரே
களைகண தில்லா தவர். (213)

## இன்னுசெய்யாமை.

பிறர்க்கின்னு செய்தலிற் பேதைமை யில்லை.
பிறர்க்கின்னு தென்றுபே ரிட்டுத்—தனக்கின்னு
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலிற்
பித்து முளவோ பிற. (95)

## புறங்கூறுமை.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. (49)

பொய்ம்மேற் கிடவாத நாவும், புறனுரையைத்
தன்மேற் படாமை தவிர்ப்பானும்,—மெய்ம்மேல்
பிணிப்பண் பழியாமை பெற்ற பொழுதே,
தணிக்கு மருந்து தலை. (152)

## மதுபானம்.

ஒளியும், ஒளிசான்ற செய்கையும், சான்றோர்
தெளிவுடைய ரென்றுரைக்குந் தேசும்,—களியென்னும்
கட்டுரையாற் கோதப் படுமேல், இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. (145)

பா—பே:—“கட்டுரையாக கோதப்படுமேல்”

## சூது.

ஓதலும், ஓதி யுணர்தலும், சான்றோரால்
மேதை யெனப்படு மேன்மையும்,—சூது
பொருமென்னுஞ் சொல்லினற் புல்லப் படுமேல்,
இருளாம் ஒருங்கே யிவை. (148)

## மானம்.

தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றால்
உணற்கு விரும்பும் குடரை—வணப்புற
ஆம்பறருள் வாடலே போல அகத்தடக்கித
தேம்பத்தாங் கொள்வ தறிவு. (157)

தேம்ப—மெலிய—வாட

## காமம்.

அறனும், அறனறிந்த செய்கையும், சான்றோர்
திறனுடைய னென்றுரைக்குந் தேசும்,—பிறனில்
பிழைத்தா னெனப்பிறரால் பேசப் படுமேல்,
இழுக்காம் ஒருங்கே யிவை. (149)

சாவாய்நீ நெஞ்சே! சல்லிய வென்னைநீ
ஆவதன்கண் ஒன்றானு நிற்கொட்டாய்.—ஓவாதே
கட்டழித்துக் காமக் கடற்கென்னை யீர்ப்பாயே
விட்டெழுங்கால் என்னுவாய் சொல் (187)

சல்லியம—கலக்கம

பழியொடு பாவத்தைப் பாராய்நீ, சன்றிக்
கழிபெருங் காயநோய் வாங்கி—வழிபடா
தோடுமன னே!விடுத் தென்னை விரைந்துநீ
நாடிக்கொள் மற்றோ ரிடம். (188)

என்னைவிடுசதோடும மனனே எ.ாசு கூட்டிககொள்வது

மக்களு மககளல் லாரும் எனவிரண்டு
குப்பைத்தே குண்டுநீர் வையகம்.—மக்கள்
அளக்குங் கருவிமற் றொண்பொருள் ஒன்றோ;
துளக்கறு வெள்வளையார் தோள். (211)

மக்களை அளக்கும் கருவி

பா—பே:—'துளக்கற'

## நட்பு.

இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலால்,—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே,
நட்டா ரெனப்படு வார். (44)

நட்டா ரெனப்படுவார் நாடுங்கால் வையத்துப்
பட்டாம் பலபிறப்புத் துன்பமென்—றொட்டி
அறநெறி கைவிடா தாசாரங் காட்டிப்
பிறநெறி போர்க்கிற் பவர். (45)

நட்டாரை வேண்டின் நறுமென் கதுப்பினாய்!
விட்டாரை யல்லாற் கொளல்வேண்டா.—விட்டார்
பொறிசுணங்கு மென்முலைப் பொன்னனாய்! உய்ப்பா
மறிதர வில்லாக் கதி. (46)

விட்டார்—துறவிகள்.

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்தெறித்துப்
பாலொடு நெய்பெய்யுந் தாயனையர்,—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிது நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார். (47)

வாய்கெறித்து—என்று பாடங்கொள்வதுமுண்டு.

கழியும் பகலெல்லாங் காலை யெழுந்து
பழியொடு பாவம் படாமை—யொழுகினார்
உய்க்கும் பொறியாரை நாடி யுழிதருமே
துய்க்கும் பொருளெல்லாந் தொக்கு. (154)

உழிதரும்—திரியும். பொருளெல்லாம் பொறியாரை நாடி உழிதரும்
பா—பே:—'உழிதருமெய்'.

காய வுரைத்துக் கருமஞ் சிதையாதார்
தாயரோ டொவ்வாரோ தக்கார்க்கு?—வாய்பணிந்
துள்ள முருக உரைத்துப் பொருள்கொள்வார்
கள்ளரோ டொவ்வாரோ தாம்? (48)

அறுதொழில் நீத்தாரை மெச்சா தவற்றோ
டுறுநரைச் சார்ந்துய்யப் போதல்,—இறுவரைமேல்
கண்ணின் முடவன் துணையாக நீள்கானம்
கண்ணிலான் சென்ற துடைத்து. (86)

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா உடையவரைத்—தெற்ற
அறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டால்
துறந்தெழுவர் தூய்க்காட்சி யார். (128)

## புலான் மறுத்தல்.

கொன்றா னுகருங் கொடுமையை யுண்ணினைந்
தன்றே ஒழிய விடுவானேல்—என்றும்
இடுக்க ணெனவுண்டோ? இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானுந் தன்னைத் தவம். (62)

'இன்றே'—பிரதிபேதம்.

"உற்றுயி ரோம்பித் தீங்தேன் ஊனொடு துறப்பின் யார்க்கும்
மற்றுரை யில்லை மண்ணும் விண்ணுநும் மடிய வன்றே",

என்றது சீவக சிந்தாமணி.

தம்புண் கழுவி மருந்திடுவர். தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்—அந்தோ
நிடுநின் றுலக நயனிலா மாநதர்
வடுவன்றோ செய்யும் வழக்கு? (97)

பா—பே:—'உலகினயனிலா'

## பொது.

அறங்கூறு நாவென்ப நாவும். செவியும்
புறங்கூற்றுக் கேளாத வென்பர்.—பிறன்றாரத்
தற்றத்தை நோக்காத கண்ணென்ப. யார்மாட்டும்
செற்றத்தைத் தீர்ந்ததா நெஞ்சு. (202)

பெண்விழைவார்க் கில்லை பெருந்தூய்மை. பேணுதூன்
உண்விழைவார்க் கில்லை உயிரோம்பல் எப்பொழுதும்
மண்விழைவார்க் கில்லை மறமின்மை. மாணுது
தம்விழைவார்க் கில்லை தவம். (115)

நல்லான் கடைசிதையும். காமுகன் கண்காணுன்.
புல்லான் பொருள்பெறவே பொச்சாக்கும்.—நல்லான்
இடுக்கணும் இன்பமும் எய்தியக் கண்ணும்
நடுக்கமு நன்மகிழ்வு மில். (150)

காமத்திற் கண் தெரியாது— (Love is blind) என்று பழமொழி உண்டு

தானத்தின் மிக்க தருமமும், தக்காற்கு
ஞானத்தின் மிக்க உசாத்துணையும்,—மானம்
அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉ மில்லை,
பழியாமல் வாழுந் திறம். (61)

தூயவாய்ச் சொல்லாடல் வண்மையும், துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்,—காயவிடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும், இம்மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை. (153)

வண்மை—லக்ஷணம் ஆயபொழுது—உண்டானபோது

வெம்மை யுடைய தடிசில். விழுப்பொருட்கண்
செம்மை யுடையதாஞ் சேவகம்.—தாரமைப்
பிறர்கருதி வாழ்வதாம வாழ்க்கை. இம்மூன்றும்
உறவருவ தோர்வதா மோர்ப்பு (204)

பா—பே.—"பிறாககருததி".

ஒறுப்பாரை யானொறுப்பன், தீயார்க்குந் தீயேன்,
வெறுப்பார்க்கு நானமடங்கே யென்ப.—ஒறுத்தியேல்
ஆர்வ மயக்கங் குரோதம் இவைமூன்றும்
ஊர்பகை நின்க ணொறு. (98)

குலத்துப் பிறந்தார் வனப்புடையார் கற்றார்
நினைக்குங்கால் நின்றுழியே மாய்வர்.—வினைப்பயன்கொல்
கல்லார் குலமில்லார் பொல்லார் தறுகட்ப
மில்லார்பின் சென்ற நிலை? (151)

தறுகட்பம்—பெருமை

கடம்பன்றான் றன்னொடு காம்படுதோள் வள்ளி
உடம்பினுங் கூட்ட மதுவுவந்து கேட்பர்.—அடங்கிக்
கொடுத்துண்மின் கொண்டொழுக்கங் காணுமி னென்பார்சொல்
அடுப்பேற்றி யாமைநீந் தற்று. (54)

உடம்பினுங கூட்டம்—மெய்யுறு புணர்ச்சி.

இரண்டாவது அடி ஐஞ்சீரடி.

வேட்டவாய்க் கேட்பர் விரைந்தோடி ஞாலத்தார்
கேட்டைக் கிழத்தியைப் பாடுங்கால்.—கோட்டில்லா
ஓதுமின் ஓதி யடங்குமின் என்னுஞ்சொல்
கூதற்குக் கூத ரனைத்து. (53)

கேட்டை—மூதேவி. கூதல்—குளிர்.

## III. நன்ஞானம்.

### நிலையாமை.

இறையிறை யின்சந்தித் தென்பொடேன் சார்த்தி
முறையி னரம்பெங்கும் யாத்து—நிறைய
அவாப்பெய்த பண்டியை யூர்கின்ற பாகன்
புகாச்சுருக்கிற் பூட்டா விடும். (168)

இறை—கையிறை. புகா—சோறு, உணவு சுருக்கின்—ஆகாரம் குறைத்தால். பூட்டா — பிணைக்காமல், இணைக்காமல். "நரம்பெங்குமார்த்து" — பாடபேதம்.

ஆசையும் பாசமும் அன்பும் அகத்தடக்கிப்
பூசிப் பொதிந்த புலாலுடம்பு,—ஊசல்
கயிறற்றாற் போலக் கிடக்குமே, கூற்றத்
தெயிறுற் றிடைமுரிந்தக் கால். (104)

மறந்தொருவன் வாழுமிம் மாயமா வாழ்க்கை
அறிந்தொருவன் வாழுமேல் இல்லை.—செறிந்தொருவன்
ஊற்றம் இறந்துறுதி கொள்ளாக்கால் ஒகொடிதே
கூற்றம் இடைகொடுத்த நாள். (68)

ஊற்றம் — பற்றுக்கோடு. ஒருவன் அறிந்து வாழுமேல் மாயமாவாழ்க்கை இல்லை.

தோற்றமுஞ் சம்பிரதம்; துப்புரவுஞ் சம்பிரதம்;
கூற்றமுங் கொள்ளுங்காற் சம்பிரதம்.—தோற்றங்
கடைப்பட்ட வாறறிந்து கற்றறிந்தார் துஞ்சார்
படைப்பட்ட நாயகனே போன்று. (174)

தோற்றம்—பிறப்பு. சம்பிரதம்—சித்து, மாயவித்தை. துஞ்சார்—உறங்கியிரார்.

தெரிவி லிளமையும் தீப்பிணியும் மூப்பும்
பிரிவும் துயிலு மொரீஇப்,—பருவந்து
பத்தெட்டு நாளைப் பயனிலா வாழ்க்கைக்கு
வித்துக்குற் றுண்பார் பலர். (113)

பருவந்து—துன்பமுற்று. வித்துக்குற்றுண்பார்—விதையைக் குற்றி உண்பவர்—மேல் விளைந்து பயன்படும் விதையைக் குற்றியுண்பவர். "வீரகின்மையின் வித்தட்டுண்டனை" (புறம் 221). "வீழ்குடியுழவன் வித்துண்டாங்கு" (புறம் 230.)

பிறப்பிறப்பு மூப்புப் பிணியென்றிந் நான்கும்
மறப்பர் மதியிலா மாந்தர்,—குறைக்கூடாச்
செல்வங் கிளைபொருள் காமமென் றிந்நான்கும்
பொல்லாப் பொறியறுக்கப் பட்டு. (132)

பொறி—ஊழ்.

மூப்புப் பிணியே தலைப்பிரிவு நல்குரவு
சாக்காடு மெல்லாஞ் சலமிலவாய்—நோக்கீர்.
பருந்துக் கிரையாமிவ் யாக்கையைப் பெற்றால்,
மருந்து மறப்பதோ மாண்பு? (133)

சலம்—பொய்—மாறுபாடு.

நீக்கரு நோய்மூப்புத் தலைப்பிரிவு நல்குரவு
சாக்காடென் றைந்து களிறுழக்கப்—போக்கரிய
துன்பத்துட் டுன்ப முழப்பர், துறந்தெய்தும்
இன்பத் தியல்பறியா தார். (134)

எக்காலுஞ் சாதல் ஒருதலையே. யானுனக்குப்
புக்கி லிறையத் தருகிலேன்.—மிக்க
அறிவனை வாழ்த்தி, அடவி துணையாத்
துறத்தன்மேற் சார்த றலை. (120)

பா—பே:—'சாதறலை'

அங்க மறவாடி யங்கே படமறைந்
தங்கே யொருவண்ணங் கோடலால்,—என்றும்
அரங்காடு கூத்தனே போலும் உயிர்தான்
சுழன்றாடு தோற்றப் பிறப்பு. (118)

இக்காலத் திவ்வுடம்பு செல்லும் வகையினால்
பொச்சாவாப் போற்றித்தா நோற்பாரை—மெச்சா
தலந்துதம் வாய்வந்து கூறு மவரின்
விலங்குகள் நல்ல மிக. (165)

பொச்சாவா—மறவாமல். அலந்து—துயருற்று.

எண்ணற் கரிய விடையூ றுடையதனைக்
கண்ணினாற் கண்டு கருதாதே—புண்ணின்மேல்
வீக்கருவி பாய இருந்தற்றால், மற்றதன்கண்
நீக்கருமஞ் சோர விடல். (117)

வீ—சாவு—நீக்கம். சோரவிடல் இருந்தற்று.

ஒருபாக னூருங் களிறைந்து நின்ற
இருகா னெடுங்குரம்பை வீழின்,—தருகாலாற்
பேர்த்தூன்ற லாகாப் பெருந்துன்பங் கண்டாலும்,
ஓர்த்தூன்றி நில்லா துலகு (206)

குரம்பை—உடல், கூடு.

நெடுந்தூ ணிருகாலா, நீண்முதுகு தண்டாக்,
கொடுங்கால் விலாவென்பு கோலி,—யுடங்கியநற்
புன்றோலால் வேய்ந்த புலால்வாய்க் குரம்பையை
இன்புறுவ ரேழை யவர். (208)

உடங்கிய—ஒன்றிய.

என்புகா லாக விருதோளும் வேயுளா
ஒன்பது வாயிலு மூற்றறாத்—துன்பக்
குரம்பை யுடையார் குடிபோக்கு நோக்கிக்,
கவர்ந்துண்ணப் போந்த கழுகு. (209)

வேயுள்—வீடு.

நீத்தொழிந்த வாறைந் தடக்கியபின் நிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் ணுளையுங்—கூத்தற்கு
வாளேறோ டோசை விளைநில மிவ்வல்லால்
கேளா யுடன்வருவ தில். (219)

['வாய்த்தமைந்த வாயப் பெண்ணுனை' என்று ஒரு பிரதியில் பாடம்.]

வாழ்நாளிற் பாகந் துயினீக்கி, மற்றவற்றுள்
வீழ்நா ளிடர்மூப்பு மெய்கொள்ளும்—வாழ்நாளுட்
பன்னோய் கவற்றப் பரிந்து குறையென்னை?
அன்னோ வளித்திவ் வுலகு. (135)

அளித்து—இரங்கத்தக்கது.

உடம்புங் கிளையும் பொருளும் பிறவும்
தொடர்ந்துபின் செல்லாமை கண்டு,—மடங்கித்
தவத்தொடு தானம் புரியாது வாழ்வார்
அவத்தங் கழிகின்ற நாள். (144)

போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாந் தொண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு. (163)

புகாவுண்பா ரல்லுண்ணூர் போகுந் துணைக்கட்
டவாவினை வந்தடையக் கண்டும்—அவாவினைப்
பற்றுச்செய் தென்னை பயமின்றால் நன்னெஞ்சே!
ஒற்றி யுடம்போம் புதற்கு. (119)

நன்ஞான நற்காட்சி நல்லொழுக்க மென்றிவை
தன்ஞன் முடித்தரு னில்லையேற்—பொன்னேபோல்
ஆவட்டஞ் செய்த வணிகலந்தே யகிற்போலு
லாய்வட்ட நில்லா துடம்பு. (131)

முடித்தருன்—முடித்தல்தான்.

## தூய்தன்மை.

புழுப்போல் உவர்ப்பூறிப் பொல்லாங்கு நாறும்
அழுக்குடம்பு தன்னுள் வளர்ந்தாய்.—விழுத்துமிழ்ந்
தின்ன நடையா யிறக்கும் வகையினை
நன்னெஞ்சே! நாடாய்கா ணற்கு. (190)

ஒழுக்க மிலஞகி யோர்த்துடைய னென்னும்
புழுப்பொதிந்த புண்ணிற் கொடிதாங்—கழுக்கிரையை
ஓம்பிமற் றென்னை? உறுதிக்க ணில்லாக்கால்
தேம்பி விடுதலே நன்று. (136)

அழுக்கிரை = அழுக்கு + இரை. தேம்பி—மெலிந்து, இளைத்து.

முடையுடை யங்கணம் நாடோறும் உண்ட
கடைமுறைவாய் போதரக் கண்டும்—தடுமாற்றில்
சாவாப் பிறவாவிச் சம்பிரத வாழ்க்கைக்கு
மேவாதாம் மெய்கண்டார் நெஞ்சு. (183)

சம்பிரதவாழ்க்கை—மாயவாழ்க்கை.

வயிறு நிறைக்குமேல வாவின்மிக் கூறிச்
செயிரிடைப்பா டெய்துமாஞ் சீவன்.—வயிறுமோர்
பெற்றியா லார்த்திப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன். (210)

## புலனடக்கல்.

புலன்கள் பொருட்டாகப் பொச்சாந்து நெஞ்சே!
சலங்களைச் சார வொழுகல்.—புலன்கள்
ஒறுக்கும் பருவத் துசாத்துணையு மாகா
வெறுத்துநீ உண்டல் கடன். (181)

புகாப்பெருக வூட்டிற் புலன்கண் மிக்கூறி
அவாப்பெருகி யற்றந் தருமால்.—புகாவுமோர்
பெற்றியா னூட்டிப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன். (122)

புகா—சோறு.

ஒறுக்கிலே னூர்பசை யென்கண் பிறரை
ஒறுக்கிற்பே னென்றுரைப்பை யாகில்,—கறுத்தெறிந்த
கற்கறித்துக் கற்கொண் டெறிந்தாரைக் காய்கல்லா
பற்கழலு யன்ன துடைத்து. (99)

கறித்து—கடித்து.

பா—பே·—"கறுத்தெறிந்த கற்குறித்து......காக்கல்லா"

உள்ளப் பெருங்குதிரை யூர்ந்து வயப்படுத்திக்,
கள்ளப் புலனைந்துங் காப்பமைத்து,—வெள்ளப்
பிறவிக்க ணீத்தார் பெருங்குணத் தாரைத்
துறவித் துணைபெறக் கால். (203)

பரிந்தெனக்கோர் நன்மை பயப்பாய்போல் நெஞ்சே!
அரிந்தென்னை யாற்றவுந் தின்னல்.—புரிந்துநீ
வேண்டுவ வேண்டுவே னல்லேன், விழுக்குணம்
பூண்டேன், பொறியிலி போ. (186)

தன்னைத்தன் னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தா நலனில்லை.—தன்னைக்
குடிகெடுக்குந் தீநெஞ்சிற் குற்றேவல் செய்தல்,
பிடிபடுக்கப் பட்ட களிறு. (207)

உள்ளு ரிருந்துந்தம் உள்ளமறப் பெற்றாரேல்,
கள்ளவிழ் சோலையாங் காட்டினார். காட்டுள்ளும்
உள்ளம் அறப்பெறு கல்லாரேல், நாட்டுள்ளும்
நண்ணி நடுவூ ருளார். (215)

நின்னை யறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே!
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்?—நின்னை
அறப்பெறு கிற்பேனேல், பெற்றேன்மற் றீண்டே
துறக்கம் திறப்பதோர் தாள். (191)

ஆதன் பெருங்களி யாளன் அவனுக்குத்
தோழன்மா ரவரும் வீண்கிளைஞர்.—தோழர்
வெறுப்பனவு மூண்டெழுந்து போனக்கால் ஆதன்
இறுக்குமாம் உண்ட கடன். (129)

ஆதன்—அறிவிலான்.

தன்னொக்குந் தெய்வம் பிறிதில்லை, தான்றன்னைப்
பின்னை மனமறப் பெற்றானேல்.—என்னை?
எழுத்தெண்ணே நோக்கி இருமையும் கண்டாங்
கருட்கண்ணே நிற்ப தறிவு. (171)

தடுமாற்ற மஞ்சிய தம்மை யுடையார்
விடுமாற்றந் தேர்ந்தஞ்சித் துஞ்சார்.—தடுமாற்றம்
யாது மறியாரும் துஞ்சார்தம் ஐம்புலனும்
ஆரும்வகை யாதாங்கொ லென்று. (175)

ஆர்வில் பொறியைந்திற் காதி இருவினையால்
தீர்விலநீ கோதாதி சேர்விக்குந்—தீர்வில்
பழியின்மை எய்தின் பறையாத பாவம்
வழியும் வருதலு முண்டு. (193)

பறையாத—சொல்லாத.

அலைபுனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற
இலையின்கண் நீர்நிலா தாகும்—அலைவில்
புலன்களில் நிற்பினும் பொச்சாப் பிலரே
மலங்கடி வாளா தவர்க்கு. (214)

மலங்கடிவு—மலங்கடிதலை.

## ஊழ்.

பெற்றி கருமம் பிழையாமற் செய்குறின்
பற்றின்கண் நில்லா தறஞ்செய்க.—மற்றது
பொன்றாப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த ஊர்நாடிக்-
கன்றுடைத் தாய்போல் வரும். (60)

பேறழிவு சாவு பிறப்பின்பம் துன்பமென்
றாறுள அந்நா ளமைந்தன.—தேறி
அவையவை வந்தால் அழுங்காது விம்மா
திவையிவை யென்றுணரற் பாற்று. (170)

பாடபேதம்:—'பேறிழவு'

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்:
தானே தனக்கு மறுமையும் இம்மையும்:
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்,
தானே தனக்குக் கரி. (173)

செய்வினை யல்லாற் சிறந்தார் பிறதில்லை.
பொய்வினை மற்றைப் பொருளெல்லாம்.—மெய்வினவில்
தாயார் மனைவியார் தந்தையார் மக்களார்
நீயார் நினைவாழி நெஞ்சு! (180)

உயிர்திகிரி யாக வுடம்புமண் ணாகச்
செயிர்கொள் வினைகுயவ னாகச்—செயிர்தீரா
எண்ணருநல் யாக்கைக் கலம்வனையும். மற்றதனுள்
எண்ணருநோய் துன்ப மவர்க்கு. (216)

முற்பிறப்பிற் றாஞ்செய்த புண்ணியத்தி னல்லதோர்
இற்புறத் தின்புறா நின்றவர்—இப்பிறப்பே
இன்னுங் கருதுமேல் ஏதம். கடிந்தறத்தை
முன்னி முயன்றொழுகற் பாற்று. (58)

'இற்பிறந்தின்புறா நின்றவ ரிற்பிறப்பே'—பாடபேதம்.

அம்மைத் தாஞ்செய்த அறத்தின் வருபயனை
இம்மைத்துய்த் தின்புறா நின்றவர்,—உம்மைக்
கறஞ்செய்யா தைம்புலனு மாற்றுதல், நல்லாக்
கறந்துண்டஃ தோம்பாமை யாம். (57)

அம்மை — வருபிறப்புக்கென்று. தாம்செய்த — தாம்முற்பிறப்பில் செய்த
உம்மைக்கு—வருகிறபிறப்புக் குதவியாக.

இறந்த பிறப்பிற்றாஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக,—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக, இனிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். (59)

தாய்தந்தை மக்கள் உடன்பிறந்தார் சுற்றத்தா
ராய்வந்து தோன்றி அருவினையால்—மாய்வதன்கண்
மேலைப் பிறப்பும் இதுவானால் மற்றென்னை?
கூலிக் கழுத குறை. (143)

தீவினையைப்பற்றி,

"அல்லித்தாள் அற்றபோதும் அறுதறா லதனைப்போலத்
தொல்லைத்தம் உடம்புநீங்கத் தீவினை தொடர்ந்துநீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச்சூழ்ந்து புக்குழிப் புக்குப்பின்னின்
றெல்லையில் துன்பவெந்தீச் சுடரெரித் திடுங்களன்றே"

என்றும், நல்வினையைப்பற்றி,

"அறவிய மனத்தராகி ஆருயிர்க் கருளைச்செய்யின்
பறவையு நிழலும்போலப் பழவினை உயிரோடாடி
மறவியொன் றுனுமின்றி மனத்ததே சுரக்கும்பால
கறவையிற் கறக்கும்தம்மால் காமுறப் பட்டவெல்லாம்

என்றும் திருத்தக்க தேவர் கூறியிருக்கிறார். (10)

## IV. மனைவாழ்க்கை.

### நற்பெண்டிர்.

வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றான்
மனைவாழ்க்கை நன்று தவத்தின் —புனைகோதை
மெல்லிய னல்லாளு நல்லள், விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனில். (89)

தவத்தின்—தவத்தைக்காட்டிலும். கோதை — (பெண்மயிர்) கூந்தல். மெல்லியல்—மெல்லிய இயலையுடையவள்-பெண்—(இங்கே) மனைவி. சொல் எதிர் சொல்லாள்—கணவனுடைய வார்த்தைக்கு எதிர் பேசாள்.

கொண்டான் குறிப்பொழுகல், கூறிய நாணுடைமை,
கண்டது கண்டு விழையாமை,—விண்டு
வெறுப்பன செய்யாமை, வெஃகாமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண். (90)

வெஃகாமை—வேண்டாமை

மடப்பதூஉம் மக்கட் பெறுவதூஉம் பெண்பான்
முடிப்பதூஉம் எல்லாருஞ் செய்வர்.—படைத்ததனுல்
இட்டுண்டில் வாழ்க்கை புரிந்துதாம் நல்லறத்தே
நிற்பாரே, பெண்டிரென் பார். (91)

மடப்பது — அறியாமையாயிருத்தல். பெண்பால் முடிப்பது — பெண்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றல். படைத்ததனுல்—படைத்த பொருளைக் கொண்டு.

வழிபா டுடையளாய், வாழ்க்கை நடாஅய்,
முனியாது சொல்லிற்றுச் செய்தாங்—கெதிருரையா
தேத்திப் பணியுமேல் இல்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் புரிந்து. (92)

வழிபாடு — கணவனுக்குச் செய்யும் உபசாரம். வாழ்க்கை — இல்வாழ்க்கை நடாஅய்—நடத்தி சொல்லிற்று—சொன்னது 'பரிந்து'—பாடபேதம்.

## தீப்பெண்டிர்.

தலைமகனிற் றீர்ந்துறைதல், தான்பிறரிற் சேர்தல்,
நிலைமையில் தீப்பெண்டிர்ச் சேர்தல்,—கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல், விழாக்காண்டல், நோன்பிடுதல்,
கோற்றொடியாள் கோளழியு மாறு. (94)

கோள்—குணம்.

அயலூ ரவன்போக அம்மஞ்ச ளாடிக்
கயலேர்கண் ஆர வெழுதிப்—புயலைம்பால்
வண்டோச்சி நின்றுலாம் வாளேர் தடங்கண்ணாள்
தண்டோச்சிப் பின்செல்லுங் கூற்று. (93)

கண்ணாள் கூற்றாம். எழுதி — மையெழுதி. புயலைம்பால் — மேகம்போன்ற கூந்தல். வண்டோச்சி—வண்டுகளை ஓட்டி. தண்டோச்சி—தண்டத்தைச் செலுத்தி.

## இல்வாழ்க்கை.

மருவிய காதல் மனையாளும் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று. (88)

உய்ப்பின் அல்லால் — செலுத்தின் செல்லுவதல்லால். வான்சகடம் — பெரிய ரதம். தெற்றிற்று—தடைப்பட்டதாய்.

பிச்சையு மையமு மிட்டுப், பிறன்றார
நிச்சலு நோக்காது, பொய்யொரீஇ,—இச்சலுங்
கொல்லாமை காத்துக், கொடுத்துண்டு வாழ்வதே,
இல்வாழ்க்கை யென்னு மியல்பு. (71)

விருந்து புறந்தரான், வேளாண்மை செய்யான்,
பெருந்தக் கவரையும் பேணன்,—பிரிந்துபோய்க்
கல்லான், கடுவினை மேற்கொண் டொழுகுமேல்,
இல்வாழ்க்கை யென்ப திருள். (72)

பிரிந்துபோய் என்பது ஒதற்பிரிவை உணர்த்துகின்றது.

அட்டுண்டு வாழ்வார்க் கதிதிகள் எஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி யுடையவர்.—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிகள் என்றுரைத்தல்,
வீழ்வார்க்கு வீழ்வார் துணை. (85)

சிறுபஞ்சமூலம்

"புல்லறத்தினன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தேல்
நல்லறத் தாரோடு நட்கலாம்.—நல்லறத்தார்க்(கு)
அட்டிட்டுண் டாற்றவாழ்ந் தார்களே இம்மையால்
அட்டிட்டுண் டாற்றவாழ் வார்"

என்றுரைக்கின்றது.

ஈகை.

நொறுங்குபெய் தாக்கிய கூழார வுண்டு,
பிறங்கிரு கோட்டொடு பன்றியும் வாழும்.
அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கை.—மற்றெல்லாம்
வெறும்பேழை தாழ்க்கொளீஇ யற்று. (78)

நொறுங்கு—நொய். ஆர—நிரம்ப. பிறங்கு—பிரகாசிக்கும். பேழை—பெட்டி. தாழ்க்கொளீஇ அற்று—தாழிட்டதை ஒக்கும்.

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுணைக் காலத்துக் கூடாதாம். தொக்க
உடம்பும் பொருளு முடையானோர் நன்மை
தொடங்காக்கால் என்ன பயன்? (74)

குவடு—சிறுமலை.

பெற்றநாள் பெற்றநாள் பெற்றதனுள் ஆற்றுவதொன்
றிற்றைநாள் ஈத்துண் டினிதொழுகல்—சுற்று
மிதனி விலேசுடை காணேம் அதனை
முதனின் றிடைதெரியுங் கால். (75)

உடை—செல்வம். 'இற்றைநாட் டீத்துண்டி னீத்தொழுகல் — சுற்றம்' — பாடபேதம்.

கொடுத்துக் கொணர்ந்தறஞ் செல்வங் கொடாது
விடுத்துத்தம் வீறழிதல் கண்டார்—கொடுப்பதன்கண்
ஆற்ற முடியா தெனினுந்தாம். ஆற்றுவார்
மாற்றார் மறுமைகாண் பார். (73)

வீறு—பெருமை.

பட்டார்ப் படுத்துப் படாதார்க்கு வாட்செறித்து
விட்டொழிவ தல்லாலவ் வெங்கூற்றம்—ஒட்டிக்
கலாய்க்கொடுமை செய்யாது. கண்டதுபாத் துண்டல்
புலாற்குடிலா லாய பயன். (103)

கலாய்—கோபித்து. பாத்துண்டல்—பகுத்துண்டல்

தண்டாமம் பொய்வெகுளி பொச்சாப் பழுக்காறென்
றைந்தே கெடுவார்க் கியல்பெனப.—பண்பாளா!
ஈதல் அறிதல் இயற்றுதல் இன்சொற்கற்
றாய்தல் அறிவார் தொழில். (164)

தண்டாமம்—மானம். பொச்சாப்பு—மாயை. இயற்றுதல்—தருமந் தேடுதல்.
பா—பே:—"இன்சொர்க்கத் தாதல்".

நீத்தாற்றி நின்ற நிலையினா ருண்டக்கால்
ஈத்தாற்றி னாரும் உயப்போவர்.—நீத்தாற்றிற்
பெற்றி புணையன்னார் பேர்த்துண்ணா விட்டக்கால்
எற்றான் உயப்போம் உலகு? (82)

கொடுத்துய்யப் போமாறு கொள்வான் குணத்தில்
வடுத்தீர்ந்தா ருண்ணிற் பெறலாம்.—கொடுத்தாரைக்
கொண்டுய்யப் போவார் குணமுடையார். அல்லாதார்
உண்டித்து வீழ்வார் கிழக்கு. (81)

கொள்வான் குணத்தில்—பெறுதற்குப் பாத்திரமானவனுக்குரிய குணத்தில்.
வடுத்தீர்த்தார் உண்ணின் உய்யப்போ மாறு பெறலாம். உண்டித்து—
உண்டு. கிழக்கு—கீழ்.

அடங்கி யடங்கினார்க் கீதல் தலையே. அடங்கா
தடங்கினார்க் கீதல் இடையே.—நுடங்கிடையாய்!
ஏற்பானுந் தானும் அடங்காக்கால் அஃதென்ப
தோற்பாவைக் கூத்தினுட் போர். (83)

முதலடி ஐஞ்சீரடி.

வாழ்நா ளுடம்பு வலிவனப்புச் செல்கதியும்
தூமா ணினைவொழுக்கங் காட்சியும்—தாமாண்ட
உண்டி கொடுத்தான் கொடுத்தலால், ஊண்கொடையோ
டொன்றுங் கொடையொப்ப தில். (87)

ஒன்றும்—வேறொன்றும்.

பரப்புநீர் வையகத்துப் பல்லுயிர்கட் கெல்லாம்
இரப்பாரில் வள்ளல்களு மில்லை,—இரப்பவர்
இம்மைப் புகழு மினிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்த லால். (220)

பா—பே·—'பல்லவருளெல்லாம்'.

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லவாம்
தான மறவாத தன்மையரேல் அஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. (76)

வைப்பு—சேமதிரவியம்.

ஒன்றாக நல்ல துயிரோம்பல்: ஆங்கதன்பின்
நன்றாய்ந் தடங்கினார்க் கீத்துண்டல்:—என்றிரண்டும்
குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயிற் றிறந்து. (63)

சோரப் பசிக்குமேல் சோற்றூர்திப் பாகன்மற்
றீரப் படினும் அதுவூரான்—ஆரக்
கொடுத்துக் குறைகொள்ளல் வேண்டும் அதனான்
முடிக்குங் கருமம் பல. (121)

ஈவாரி னில்லை உலோபர்: உலகத்தில்
யாவருங் கொள்ளாத வாறெண்ணி—மேவரிய
மற்றுடம்பு கொள்ளும் பொழுதோர்ந்து தம்முடைமை
பற்று விடுத லிலர். (221)

பாடபேதம்—'பற்றுவிடத் தில்லா தவர்'.
'பொழுதுந் தமதுடைமை'.

இட்டக் கடைத்தரார் ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார்,—நட்ட
சுரிகையாற் காணுஞ் சலாக்கோலாற் காணுஞ்
சொரிவதா மாபோற் சுரந்து. (77)

பலி—பிச்சை.

கொடுப்பான் பசைசார்ந்து கொள்வான் குணத்திற்
கொடுக்கப் படுத லமையின்—அடுத்தடுத்துச்
சென்றுங் கடைந்து களைவினை யென்பரே
வென்றார் விளங்க விரித்து. (80)

கொடுப்பான் வினையல்லன் கொள்வானு மல்லன்
கொடுக்கப் படும்பொருளு மென்றால்— அடுத்தடுத்து
நல்லவை யாதாங்கொல் நாடி யுரையாய்நீ
நல்லவா நாப்பண் நயந்து. (79)

'மன்றால்'—பாடபேதம

## V. வீட்டுலகமெய்தல்.

அறிவு மிகப்பெருக்கி ஆங்கார நீக்கிப்
பொறியைந்தும் வெல்லும்வாய் போற்றிச்—செறிவினன்
மன்னுயி ரோம்புந் தகைத்தேகாண் நன்ஞானந்
தன்னை உயக்கொள் வது. (205)

செறிவு—மிகுதி. உய—உய்ய—ஈடேற.

சோறியாரு முண்ணாரோ? சொல்லியாருஞ் சொல்லாரோ?
ஏறியாரும் வையத்துள ஏறாரோ?—தேறி
உரியதோர் ஞானங்கற் றுளளந் திருத்தி
அரிய துணிவதா மாண்பு. (125)

பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம். பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்.—ஓம்பற
கொளியாம் உயர்ந்தார்கண் ஞானம். அதுபோற்
களியாங் கடையாயார் மாட்டு. (52)

கெடுக்கப் படுவது தீக்கருமம் நாளும்
கொடுக்கப் படுவ தருளே.—அடுத்தடுத்
துண்ணப் படுவது நன்ஞானம். எப்பொழுதும்
எண்ணப் படுவது வீடு. (64)

இந்தியக் குஞ்சரத்தை ஞான விருங்கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே- பந்திப்பர்,
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார். (192)

உணர்ச்சியச் சாக உசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாகன் உணர்வுடைய னாகுமேல்,
பேர்கின்ற தாகும் பிறப்பு. (169)

உசா—ஆராய்ச்சி. ஊர்கின்ற—செலுத்துகின்ற

தறுகட் டறுகட்பம் தன்னைத்தா னேவல்.
உறுதிக் குறுதி யுயிரோம்பி வாழ்தல்.
அறிவிற் கறிவாவ தெண்ணின், மறுபிறப்பு
மற்றீண்டு வாரா நெறி. (126)

தறுகட்டறுகட்பம்—பெருமைக்கெல்லாம் பெருமை.

உயிர்வித்தி யூன்விளைத்துக் கூற்றுண்ணும் வாழ்க்கைச்
செயிர்வித்திச் சீலந்தின் றென்னை?—செயிரினை
மாற்றி மறுமை புரிகிற்பின் காணலாம்
கூற்றங் குறுகா விடம். (110)

செயிர்—குற்றம். சீலம—நல்லொழுக்கம்.

இருளே உலகத் தியற்கை. இருளகற்றுங்
கைவிளக்கே கற்ற வறிவுடைமை.—கைவிளக்கின்
நெய்யேதன் னெஞ்சத் தருளுடைமை. நெய்பயந்த
பால்போ லொழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலகம் எய்து பவர். (146)

பரிவு—துன்பம்.

ஆர்வமுஞ் செற்றமு நீக்கி யடங்குதல்
சீர்பெறு வீட்டு நெறியென்ப.—நீர்புகப்
பட்டிமை புக்கான் அடங்கின னென்பது
கெட்டார் வழிவியக்கு மாறு. (166)

பட்டிமை—களவு, வஞ்சகம்.

அருளால் அறம்வளரும் ஆள்வினையால் ஆக்கம்.
பொருளாற் பொருள்வளரும். நாளும்—தெருளா
விழைவின்பத் தால்வளருங் காமம். அக் காமம்
விழைவின்மை யால்வளரும் வீடு. (141)

ஆள்வினை—முயற்சி. தெருளா—தெளியாத. விழைவு—கலத்தல். தெருளா
விழைவு—புணர்ச்சி—இணைவிழைச்சு. விழைவின்மை—விரும்பாமை.
"ஊக்கம்"—என்றும் பாடபேதம் உண்டு.

பண்ணமை யாழ்குழல் கீதமென் றின்னவை
நண்ணி நயப்ப செவியல்ல.—திண்ணிதின்
வெட்டெனச் சொன்னீக்கி விண்ணின்பம் வீட்டொடு
கட்டுரை கேட்ப செவி. (195)

வெட்டெனச்சொல் — கடுமையாகச்சொல்லும் வார்த்தை. கட்டுரை—உறுதிச் சொல்.

புண்ணுகப் போழ்ந்து புலால்பழிப்பத் தாம்வளர்ந்த
வண்ணப்பூண் பெய்வ செவியல்ல.—நுண்ணூல்
அறவுரை கேட்டுணர்ந் தஞ்ஞான நீக்கி
மறவுரை விட்ட செவி. (194)

போழ்ந்து — பிளந்து. புலால் — மாமிசம். வண்ணம்பூண் — அழகிய அணி. மறவுரை—பாவவார்த்தை.

கண்டவர் காமுறூஉங் காமருசீர் காதிற்
குண்டலம் பெய்வ செவியல்ல.—கொண்டுலகில்
மூன்று முணர்ந்தவற்றின் முன்னது முட்டின்றிச்
சூன்று சுவைப்ப செவி. (196)

காமரு—அழகுபொருந்திய. சூன்று—தோண்டி—குடைந்தெடுத்து.

பொருளெனப் போழ்ந்தகன்று பொன்மணி போன்றெங்கும்
இருளறக் காண்பன கண்ணல்ல.—மருளறப்
பொய்க்காட்சி நீக்கிப் பொருவறு முக்குடையான்
நற்காட்சி காண்பன கண். (197)

*சாந்தும் புகையுந் துருக்கமுங் குங்குமமும்
மோந்தின் புறுவன மூக்கல்ல.—வேந்தின்
அலங்குசிங் காதனத் தண்ண லடிக்கீழ்
இலங்கிதழ் மோப்பதா மூக்கு. (198)

துருக்கம்—கஸ்தூரி. அலங்கு—பிரகாசிக்கும்.

கைப்பன கார்ப்புத் துவர்ப்புப் புளிமதுரம்
உப்பிரதங் கொள்வன நாவல்ல. —தப்பாமல்
வென்றவன் சேவடியை வேட்டுவந் தெப்பொழுதும்
நின்று துதிப்பதா நா. (199)

கொல்வதூஉங் கள்வதூஉ மின்றிப் பிறர்மனையிற்
செல்வதூஉஞ் செய்வன காலல்ல.—தொல்லைப்
பிறவி தணிக்கும் பெருந்தவர் பாற்சென்
றறவுரை கேட்பிப்ப கால். (200)

தொல்லைப்பிறவி—பழமையாக வரும் பிறப்பு.

குற்றங் குறைத்துக் குறைவின்றி மூவுலகில்
நற்ற மறைத்தாங் கருள்பரப்பி,—முற்ற
உணர்ந்தானைப் பாடாத நாவல்ல; அல்ல
சிறந்தான்றாள் சேராத் தலை (201)

முற்ற உணர்ந்தான்—ஸாவக்ஞன். குற்றம் நற்றம் என்பன மறுதலை மொழிகள்

உடன்பிறந்த மூவர் ஒருவனைச் சேவித்
திடங்கொண்டு சின்னா'ளிருப்பர்—இடங்கொண்ட
இல்லத் திருவ ரொழிய ஒருவனே
செல்லும் அவன்பின் சிறந்து. (130)

கட்டெனச் சொல்லியக்கால் கற்பிளப்பிற் றீயேபோல்
பொட்டப் பொடிக்குங் குரோததை,—வெட்டெனக்
காய்த்துவரக் கண்டக்கால் காக்குந் திறலாரே
மோக்க முடிவெய்து வார். (100)

நல்வினை நாற்கால் விலங்கு நவைசெய்யுங்
கொல்வினை யஞ்சிக் குயக்கலம்—நல்ல
உறுதியு மல்லவும் நாட்பேர் மரப்பேர்
இறுதியி லின்ப நெறி. (137)

பறவை யரும்பொரு ளின்சொன் முதிரை
உறுதிக்கண் ணூனூண் விலங்கு,—சிறியன
நீர்ப்புட் குயக்கலம் புல்லவை யூர்வது
பேர்த்தீண்டு வாரா நெறி. (138)

உட்கப் படுமெழுத் தோரிரண் டாவதே;
நட்கப் படுமெழுத்தும் அத்துணையே.—ஒட்டி
இழுக்கா வெழுத்தொன், றிமிழ்கடற் றண்சேர்ப்ப!
விழுச்சார்வு வேண்டு பவர்க்கு. (139)

முப்பெயர் மூன்றும் உடன்கூட்டி, ஓரிடத்துத்
தப்பிய பின்றைத்தம் பேரொழித்,—தப்பால்
பெறுபெயரைக் காயப் பெறுபவே? வையத்
துறுமவினை யெல்லா மொருங்கு. (140)

## பொது.

ஆற்றாமை யூர அறிவின்றி யாதொன்றும்
தேற்றா னெனப்பட்டு வாழ்தலின்,—மாற்றி
மனையி னகன்றுபோய் மாபெருங் காட்டில்
நனையி லுடம்பிடுதல் நன்று. (155)

நனை—கள்—தேன் நனையில்—சாரமில்லாத—பயனில்லாத.

நல்லற மெந்தை, நிறையெம்மை, நன்குணருங்
கல்வியென் றோழன், துணிவெமபி,—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரி னெனக்கு. (160)

பொய்ச்சுற்றத்தாரும் எனக்குப் பொருளாய இச்சுற்றத்தாரின் பொருளோ?

மக்களே பெண்டிர் மருமக்கள் தாய்தந்தை
ஒக்க வுடன்பிறந்தா ரென்றிவர்கள்—மிக்க
கடும்பகை யாக உழலும் உயிர்தான்
நெடுந்தடு மாற்றத்துள் நின்று. (161)

உயிர்தான் இவர்கள் கடும்பகையாகத் தடுமாற்றத்துள் நின்று உழலும்.

அளறகத்துத் தாமரையாய் அம்மல ரின்றாங்
களற்றுடம் பாமெனினு நன்றாம், அளற்றுடம்பின்
நன்ஞான நற்காட்சி நல்லொழுக்க மென்றிவை
தன்னால் தலைப்படுத லான். (177)

அளறு—குழைசேறு

ஆங்கு அளற்றுடம்பின தன்னால் இவை தலைபபடுதலான உடம்பு அளறு மெனினும் நன்றாம்

தோற்றமில் லாத ஒருவனைப் பின்னின்றாங்
காற்ற நலிவர் இருநால்வர்—ஆற்றவும்
நல்லார்போல் ஐவர் பகைவளர்ப்பர். மூவரால்
செல்லும் அவன்பின் சிறந்து. (179)

அவன் மூவரால் பின் சிறந்து செல்லும்.

அருவினையு மாற்றும்; வருபயனு மாக்கும்;
இருவினையு நின்று விளையும்.—திரிவின்றிக்
கண்டுணர்ந்தார்க் கல்லது காட்டதரு நாட்டதரும்
கொண்டுரைப்பா நிற்றல் குதர். (217)

குதர்தல்—சிதறுதல். குதர்செய்தல்— இழித்தல் — பிரித்தல். குதர் — பிரிவு. குதர்செல்ல—வழிதப்பிச்செல்ல. "குதர் சென்று கொள்ளாத கூர்மை யினிதே" என்பது இனியா நாற்பது.

நாலிறகிற் கண்ணிலதே யெனினு நன்பொருளின்
பேரிறையா னூண்பெயரிற் பிற்சிறக்கு மோரிரண்
டிறகிற் கண்ணுளதே யெனிலு மதனை
வெருண்டு விலங்காமற் கா. (218)

## இந்நூற்பயன்.

ஆதியின் தொல்சீர் அறநெறிச் சாரத்தை
ஓதியுங் கேட்டும் உணர்ந்தவர்க்குச்,—சோதி
பெருகிய வுள்ளத்த ராய்வினைகள் தீர்ந்து
கருதியவை கூடல் எளிது. (222)

உணர்ந்தவர்க்குக் கருதியவை கூடல் எளிது.

எந்நூல்க ளோதினும் கேட்பினும் என்செய்யும்?
பொய்ந்நூ லவற்றின் பொருடெரிந்து,—மெய்ந்நூல்
அறநெறிச் சாரம் அறிந்தார்வீ டெய்துந்
திறநெறிச் சாரந் தெளிந்து. (223)

தெரிந்துதெளிந்து அறிந்தார ஓதினும் கேட்பினும் என்னசெய்யும்?

அவன்கொல் இவன்கொலென் றையப் படாதே,
சிவன்கண்ணே செய்ம்மின்கள் சிந்தை,—சிவன்றானும்
நின்றுகால் சீக்கு நிழறிகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து. (225)

ஐயபபடாதே, சிவன்றானும் சீக்கும் வேந்து ஆகிய சிவன் கண்ணே சிந்தை செய்ம்மின். சீக்கும்—சுத்தி செய்கிற.

முனைப்பாடி யானைச்சூர் முக்குடைச் செல்வன்
றனைப்பாடி வந்தோற்குத் தந்த பரிசில்,
வினைப்பாடு கட்டழித்து, வீட்டின்ப நல்கி,
நினைப்பாடி வந்தோர்க்கு நீமீ கென்றான்
நிறைவிளக் குப்போ லிருந்து.

சூர்—தெய்வம். நீமீக—நீமம் ஈக—ஒளி தருக. நினைப்பாடி—நினைத்து.

செல்வன், வந்தோன் முனைப்பாடியானுக்குத் தந்த பரிசில்,......அழித்து நல்கி விளக்குப்போலிருந்து நீமீக என்றான் என்பதாம்.

# அறநெறிச்சாரம்

## அநுபந்தம்.

### I. EXTRACTS FROM ELLIS' KURAL.

1. The various sects that have existed in India, whether deriving their opinions from the Vedas, the Paramágamam (the sacred writings of the Jains are collectively so called), or the writings of the Bauddhas, appear to have agreed in the idea that seclusion from worldly affairs was necessary for the attainment of a true knowledge of divine things, and to have established, consequently, from the earliest ages, different orders of devotees. By the Smrities, two rules only, that for the Vánaprastha and that for the Sanyási, are recognized. To both, the common name Hermit is applicable, as the votaries of each order were inhabitants of the wilderness. The former continued to perform the five great sacraments (pancha mahá yejnam) ordained by the law to be observed by Grahí or householder: the latter did not perform these or any other rites or ceremonies religious or civil. The former might live in community, collect provisions, as herbs, roots, fruit, etc., and prepare food; while the latter, also called Bhicshaca Mendicants, subsisted wholly on alms.

2. By the Jains, to whom the Vánaprastha was unknown, the order of the Sanyási was divided into various degrees, but these, except the last which was the completion of the ascetic state, were in fact distinguished from each other only by the discipline they observed and the peculiar austerities they practised. In addition to the several names of Sanskrit and Tamil derivation given to ascetics in general and common to all, the Nigandu, which, as being the composition of a Jain, is in this instance the best authority, thus enumerates those peculiar to this sect :—

*தாவில் சௌமியரே யோகர் திகம்பரர் சமணர் நீத்தோர்*

the Saumier and Yoger, to which others add *ஆசீவகர்* (Ajivager), are general terms, but Digambarer, they who are clothed by the horizon, synonymous with Nirvani, was applicable only to those, who, having finally released themselves from all material wants and desires, had renounced

the use of raiment and of every worldly convenience, and had retired, far from the haunts of men, to total solitude and silence. Between these and the Sáraner, there is no material difference: the latter term which is derived from the Sanskrit root *Char* to move, act, describes the power these devotees are supposed to have obtained over material obstacles.

*நீரினிற் பூவில் வானில் நினைந்துழி ஒதுங்கு கின்ற*
*சாரணர் எண்ம ராகும் சமணரில் இருத்திப் பெற்றோர்*

The Sáraner of eight descriptions, who penetrate into the ocean, the earth and the heavens, are those among the Samaner who have obtained true greatness.

There is another distinction of the Jaina devotees, namely, S'wétámbara, Rectámbara and Digambara; the first, those clothed in white garments, who are known in the north of India by the corrupt term Jeti for Yeti, differ from the second only in the peculiarity indicated by their respective names; the second, those clothed in red garments, dyed by a species of ochre (in Sanskrit casayam and in Tamil cavi-cal) which affords a tawny red inclined to orange and is similarly used by the devotees of the other sects, are peculiar to the south; the third, who have been already described, it is scarcely necessary to say are in this degenerate age wholly unknown. The laity of the Samaner, though included under that general term, are properly denominated Sávager in Tamil and Srávacáh in Sanskrit.

3. At present the Bauddha religion prevails nowhere on the continent of India within the Ganges. The followers of this faith have been so completely extirpated that, throughout this region, there now remains not one in any tribe or nation. But their solid hemispherical temples, which are in fact shrines supposed to contain the relics of the last Buddha, and which may still be seen in the vicinity of Benares and elsewhere, and their forsaken establishments, more frequent in the west of India, prove by their stupendous remains the consequence of this sect in ancient times. The caves of Kenera on the island of Salsette have evidently been the convent of a Society of Talapoins, Lamas, or Bronzes, as they at present exist in Ava, Tibet and China, and so probably have been those at Carli and

Ellora. The religious of this sect, called in Tamil சீவகர் Jivager, whenever mentioned by the elder writers, for none of their own works exist in this language, are constantly distinguished from those of the Jains. At present, however, the Bauddhas who were never numerous in Southern India, are generally confounded with the Jains.

## 4. THE OBSERVANCES OF THE SRAVACA

அருங்கலச்செப்பு.

*பெரிய கொலை பொய் களவோடு காமம்*
*பொருளை வரைதலோ டைந்து.*

The slaughter of animals with perfect senses, falsehood, theft, irregular desire, and the accumulation of wealth, which are the five heinous sins.

*வரைபாய்தல் தீப்புகுதல் ஆறாடல் என்ன*
*உரைப்பின் உலக மயக்கு.*

Throwing oneself from a mountain or into a fire, and bathing in sacred rivers ; these are called worldly delusions.

*மயக்கார்வம் செற்றம் உடையாரை ஏத்தல்*
*தியக்குடை தெய்வ மயக்கு.*

Worshipping Gods subject to delusion, partiality, or anger ; this folly is delusion, respecting the Deity.

*மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல்*
*பாசண்ட மூட மெனல்.*

Honoring those as saints who pursue a faulty path ; this is heretical folly.

*உண்டி மருந்தோ டுறையுள் உபகரணம்*
*கொண்டுய்த்தல் நான்கா வதம்.*

To furnish food, physic, lodging and all needful aid to holy men are the four special duties of a householder.

அறநெறிச்சாரம்.

*பிச்சையும் ஐயமும் இட்டுப் பிறன்தாரம்*
*நிச்சலும் நோக்காது பொய்யொரீஇ—நிச்சலும்*
*கொல்லாமை காத்துக் கொடுத்துண்டு வாழ்வதே*
*இல்வாழ்க்கை யென்னும் இயல்பு.*

Alms to holy men and to the poor; never to behold the wife of another; utterly to eschew falsehood; to keep oneself from slaughter; and to eat after giving food to others: so to live, is declared to be the essential nature of domestic duties.

*விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்*
*பெருந்தக் கவரையும் பேணான்—பிரிந்துபோய்க்*
*கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்*
*இல்வாழ்க்கை யென்ப திருள்.*

He who receiveth not guests hospitably, who is not generous, who does not honor the truly worthy, who learns not by separation from his wife, who practises slaughter; by thus acting is said to darken the domestic state.

## OBSERVANCES OF THE YETI

அருங்கலச்செப்பு.

*கொலைமுதலா வைந்தினையும் முற்றத் துறத்தல்*
*தலையாய மாவிரத மாம்.*

To refrain wholly from the practice of the five heinous sins of which the destruction of creatures is the chief, is perfect devotion.

*பற்றொடு செற்றமே சுற்றம் தொடர்ப்பாடு*
*முற்றுந் துறக்கப் படும்.*

All mundane affection, anger, and connection with relations must be totally avoided.

அறநெறிச்சாரம்.

*மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்*
*செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை*
*திறம்பா விரதம் தரித்தலோ டின்ன*
*அறம்பத்தும் ஆன்ற குணம்.*

Truth, humility, respect, devotion, temperance, impartiality, the forsaking of all things, retirement, benevolence, and pertinacious abstinence; the devotee who is endowed with these ten virtues possesses the highest qualities.

அறிவு மிகப்பெருக்கி ஆஙகார நீக்கிப்
பொறியைந்தும் வெல்லும்வாய் போற்றிச்—செறிவினான்
மன்னுயி ரோம்பும் தகைத்தேகாண் நன்ஞானந்
தன்னை உயக்கொள் வது.

Constantly increasing in knowledge, and being divested of all selfish feeling, he ought to keep the five senses in subjection, but yet to cherish them, and thus, protecting all living, he should make wisdom flourish.

Slaughter is forbidden to the Smàrta Grahastha as well as the Srávaca. Slaughter applies to the slaying of animals by Bráhmans except for sacrifice; in the latter case, it extends to the destruction of animal life on any account, bloody sacrifices not being offered by the Jainer, and even to the use of vegetables or vegetable productions in which the principle of life remains, such as roots of all kinds, fresh fruit and fresh grain; this, however, though not accounted meritorious, is partially permitted to the Sravaca, but wholly forbidden to the Yeti. Those who observe the ordinances of the Sruti and Smriti are permitted both to slaughter animals and to eat their flesh according to prescribed rules; the Bauddhas are forbidden to slaughter animals, but it is lawful for them to eat their flesh when slain by others; both the slaughter of animals and the use of their fiesh are forbidden to the Jainas who are also much more restricted in the use of vegetable food than the others. This distinction is the cause of a deadly feud between the last mentioned sects. The Jaina objects to flesh being eaten by the Bauddha as being contrary to the precept both are bound to observe; that is அஹிம்ஸா பரமோ தர்ம்மா to refrain from slaughter is the highest duty. The Bauddha replies,—I incur sin only by slaying animals, not by eating their flesh when slain by others. The Jain answers,—You incur sin in either case, for by using their flesh, you encourage those who expose it for sale in the market, and are, therefore, the primary cause of the destruction of the animals they slay.

The Brahmachári only is prohibited by the Smritis from taking food during the night; but this is forbidden generally to the Jains, and the reasons assigned are that ants and other small animals cannot then be seen and might, therefore, be unconsciously swallowed with the

food, and that Bhútas, Bétalas and other demons, who might cause defilement by eating out of the same dish, are then wandering about.

The Sravacah is of three grades: the Jaghanyam, the Madhyamam, and the Uttamam. The first are the worldly sort who, though professing the religion, are scarcely considered as belonging to this community; the second are more strict in diet and correct in religious observance; the third, though still continuing in the marriage state, practise merely the same austerities as the Yeti. The second of these comprehends the great body of the Jaina Laity, and by them the following rules, in addition to those already stated, should be observed:—

He should have a firm faith in Jinésvara, the Lord of the three worlds, who is crowned by a triple umbrella, and whose appearance is most glorious, placing, as it were, his feet on the core of the heart; he should be zealous for the truth; should consider virtue as the friend and sin as the enemy of life; should clearly comprehend the difference between heaven and final beatitude; when repeating his daily prayers and performing his devotion in the morning, noon and evening, he should offer libations of water, Arghyam, to the Divine Being only, who is worshipped by all living; he should practise four kinds of discipline, by never passing the bounds of the country in which he resides, by vowing the performance of good works, by fasting on alternate days and by honoring religious persons: on the four Parvams, namely on the eighth and fourteenth days of the moon and on the day of the new and full moon, he should observe a fast as strict as his strength will allow. Those things he should avoid are:—inordinate care for worldly wealth: the several kinds of fear, namely the dread of this world, and of the other, the dread of inability and of the discovery of the thoughts, the dread of death, of destiny and disease; the desire either of living longer or of dying sooner: gambling, eating flesh meat, drinking spirits, frequenting the company of harlots, hunting, seducing the wives of others, and theft, which are the seven causes of affliction: the offering of libations of water to the sun; bathing during eclipses; worshipping the fire with various rites as a deity; prostration behind a cow; the consecration of precious stones, vehicles and weapons: bathing in the sea and in rivers, as a

purification from sin; the dedication of mounds of earth and stones; suicide by falling from a mountain or into the fire, these and all similar worldly follies; also the superstitious folly of worshipping Gods, influenced by affection or aversion, for the purpose of obtaining special endowments; and the heretical folly of believing that to be the true path in which those walk, who are involved in the whirlpool of life, and debased by avarice and the destruction of creatures; eating of the fruit of the Fig tree, the Arasu, the Á'l, the Callál, or the Ilandei, which all contain animalculæ, or of honey. Moreover he must not receive as Gods those that are not Gods, as Gurus those who are not Gurus, or as the principles of nature (tatwa) those which are not such; and he must abstain from three things, namely from quitting his native place, from giving to others either weapons or tools by which life may be destroyed, and from excess in gratifying the senses, either in minor pleasures, as in smelling perfumes or listening to music, or in higher gratifications, as in eating delicious meats, or enjoying the society of beautiful women.

---

## II. EXTRACTS FROM ஜைந சமய சித்தாந்தம் FOUND IN THE INTRODUCTION TO நாமகளிலம்பகம் OF JIVAKACHINTAMANI

### (Edited by the Rev. H. Bower)

ஜைந சமயத்தார் ஆதிகாலத்திலே இந்த உலகத்தில் ஜைந சமயம் ஒன்றே அனாதியாயிருந்த சமயமென்றும், மற்றச் சமயங்களெல்லாம் இதிலிருந்தே உண்டாயினவென்றும், இந்தச் சமயத்தில்தானே நன்றாய்க் கற்றுணர்ந்த கல்விமான்கள் காலதோஷத்தினாலே அநேக சமயங்களை உண்டுபண்ணினார்க ளென்றும், மோட்ச சுகம் இந்தச் சமயத்திலல்லாமல் மற்ற யாதொரு சமயத்திலும் கிடையாதென்றும், உண்மையான சமயம் இது ஒன்றேஎன்றும், மற்றச் சமயங்களெல்லாம் பொய்யை மெய்யென்று நம்பின சமயங்களென்றும், உண்மையாய் நம்பியிருக்கிறார்கள்.

இந்த உலகம் அநாதியாய் நிலைபெற் றிருக்கிறதென்றும், ஒரு காலத்திலும் அழியாத நிலைமையை உடையதென்றும், கடவுள் முதலிய யாவராலும் உண்டாக்கப்பட்ட தல்லவென்றும், நிச்சயமாய்ச் சொல்லுகிறார்கள். அதோகதி முதல் தேவலோக மீறாகவுள்ள லோகங்களுக்கு மேல் அகமிந்திரலோக முண்டென்றும், அதன்மேல் இந்த உலகங்களுக்கெல்லாம் கர்த்தாவாகிய அநாதி சித்த பரமேஷ்டி என்னப்பட்ட

பராபர வஸ்து இருக்கப்பட்ட மோக்ஷ உலகம் உண்டென்றும் சொல்லுகிறார்கள்........மகா மேருவுக்கு இரண்டு பக்கத்திலும் மூன்றுவித போக பூமிகள் உண்டென்றும் சொல்லுகிறார்கள். இந்தப் போக பூமியில் பிறந்த மனிதர்களுக்கு ஆயுசும் சரீர வுயரமும் மிகவும் அதிகம்.

ஜைநர்கள் அருகதேவனைத் தங்களுக்குப் பிரதானமான கடவுளாக எண்ணித் தொழுதுகொண்டு வருகிறார்கள். இந்தத் தேவனுக்கு ஜினன் என்றும் பிரசித்தமான பேர் உண்டு. இந்தப் பேர் பற்றியே இவர்களுக்கு ஜைநர் என்று காரணப்பேர வந்ததாம் இவர் செனன மரணம் இல்லாதவர்: எல்லா வுயிர்கள் மேலும் மிகுந்த கிருபையையும் அன்பையும் இரக்கத்தையும் உடையவர். இந்த உலகத்தில் ஆதியிலே எல்லா உயிர்களுக்கும் இன்பத்தை உண்டுபண்ணும்படியாக அநாதியான வேதங்கள் பன்னிரண்டையும் வெளிப்படுத்தினவர். மூன்று குடையினை யுடையவர். தன்னைப் போலவே வேதமும் உலகமும் காலமும் உயிர்களும் கர்மமும் தர்மமும் என்றென்றைக்கும் அழியாமல் நித்தியமாயிருக்கப்பட்ட பொருள்களென்று அறிவித்தவர்.

இந்த அருகதேவனனவர் தன்னையல்லாமல் வேறே தெய்வம் இல்லையென்றும், தன்னைத் தொழுது வணங்கினவர்களெல்லாரும் முத்திசுகம் அடைவார்களென்றும், தன்னைத் தொழாதவர்களுக்கெல்லாம் முத்திசுகம் இல்லையென்றும், எல்லா உயிர்களும் தாம் செய்த நல்வினை தீவினைப் பயன்களைத் தாமே அனுபவிக்குமென்றும், பாவ மிகுதியால் நரகம் புகுமென்றும், புண்ணிய மிகுதியால் தெய்வலோகம் புகுமென்றும், புண்ணிய பாவமிரண்டும் கலந்தவிடத்து மனித சென்மத்தை அடையுமென்றும், பாவத்தினால் விலங்கு செனனமெடுக்குமென்றும், புண்ணியமும் பாவமும் இரண்டும் நாசமாய்ப் போன விடத்து மோட்சம் அடையுமென்றும், திருவுளம்பற்றியருளினு ராதலால், இதுவே உண்மையான தத்துவமென்று இந்தச் சமயத்தார் மிகவும் உறுதியாய் நம்பியிருக்கிறார்கள்.

பதினன்கு மனுக்களில் பதினன்காம் மனுவாகிய நாபி மகாராசாவைப் பிரமா என்று சொல்லுகிறார்கள். இவருடைய மனைவி மருதேவியம்மாள. இவர் காலத்தில் விருஷப தீர்த்தங்கரர் என்ற பேருடைய முதல் அவதாரபுருஷர் தோன்றினர். இவருக்குப் பிற்பாடு இருபத்துமூன்று தீர்த்தங்கரர்கள் இவரைப்போலவே அவதார புருஷர்களாய்ப் பிறந்தார்கள். இவர்கள் காலத்தில் சக்கரவர்த்திகள் பன்னிரண்டுபேர்களும், ஒன்பது பலதேவர்களும், ஒன்பது வாசுதேவர்களும், ஒன்பது பிரதிவாசுதேவர்களும் தோன்றினர்கள். இவர்கள் அறுபத்து மூவருக்கும் சலாகா புருஷரென்றும் பேர் உண்டு.

இந்தத் தீர்த்தங்கரர் இருபத்துநால்வரும் குருபதேசம் இல்லாமலே சகலகலா வல்லமை உடையவர்களாகியும், தேவர்களாலே எப்போதும் பூசிக்கப்பட்ட பெருமையை உடையவர்களாகியும், பிறந்தபொழுதே மூன்று ஞானங்களை உடையவர்களாகியும், தேவேந்திரர்களால் செய்யப்பட்ட சம்பவ சரணம் என்னும் பேருடைய கோவிலிலே சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து மூன்று குடையினையும் அசோக மரத்தினையும் உடையவராகியும், தேவதேவர்களென்றும் சர்வத்தையும் அறிந்தவர்களென்றும் உலக மூன்றினுக்கும் கர்த்தர்களென்றும் எல்லாப் பாவங்களையும் நீக்கி மோட்ச சுகத்தைக் கொடுப்பவர்களென்றும் எல்லா வுயிர்களாலும் புகழ்ந்தேத்தப்பட்ட திவ்விய குணங்களை உடையவர்களாகியும், ஆயிரத்தெட்டுத் திருமறுக்களைத் தங்களுடைய திவ்விய தேகத்தில் உடையவர்களாகியும், எல்லா வுயிர்கள்மேலும் மிகுந்த தயவும் அன்பும் இரக்கமும் உடையவர்களாகியும், எல்லா லோகத்தாருக்கும் சீவன்களுக்கும் பன்னிரண்டு வேதங்களில் உள்ள சகலமான கொல்லாமை முதலிய தர்மங்களை உபதேசித்தருளாநின்ற மகத்துவம் உள்ளவர்களாகியும், ஞானமே திருமேனியாக உடையவர்களாகியும், அவதாரமெடுத்து மோட்சானந்த சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிற திவ்விய பரம அவதார புருஷராகையால், இவர்கள் இருபத்துநால்வரையும் கடவுட்டன்மை பொருந்திய அருக தேவராகிய சுவாமிகளென்று ஜைநர் முக்கியமாய் நம்பியிருக்கிறார்கள் இந்தத் தீர்த்தங்கர சுவாமிகளுக்குக் கோவில்களை உண்டாக்கி, இவர்களைப்போலச் சிலையினாலும் தாருக்களாலும் சுவர்னங்களாலும் இரத்தினங்களாலும் விக்கிரகங்களை உண்டுபண்ணி, இந்த விக்கிரகங்களை அருக தேவராகப் பாவித்து, நித்திய பூசைகளும் விசேஷ பூசைகளும் திருவிழா முதலான உற்சவங்களும் நடத்திக்கொண்டு வருகிறார்கள்

மேலும் இந்தச் சமயத்தில் பிராமணர்களும் இராசாக்களும் வைசியரும் சூத்திரர்களுமாகிய நால்வகை வருணத்தாரும் விருஷப தீர்த்தங்காருடைய காலத்தில் பரதேசுபரன் என்று சொல்லப்பட்ட முதல் சக்கரவர்த்தியினால் உண்டாக்கப்பட்டார்களென்று சொல்லுகிறார்கள்.

மேலும் விருஷப சுவாமிகாலத்தில் சைவ சமயம் உண்டாயிற்றென்றும், அக்காலத்திலேதானே மரீசிகுமாரனென்று சொல்லப்பட்ட ஒரு மகா புருஷனாலே காலதோஷத்தால் தொண்ணூற்றாறு பாஷண்டி மதங்கள் உண்டாக்கப்பட்டனவென்றும், பதின்மூன்றாந் தீர்த்தங்கருடைய (விமலசுவாமி) காலந்தொடங்கி வைஷ்ணவ சமயம் உண்டாயிற்றென்றும், இருபத்துமூன்றாந் தீர்த்தங்கராகிய பார்சுவநாத சுவாமி காலத்தில் துலுக்கர்மதம் உண்டாயிற்றென்றும் சொல்லுகிறார்கள்

மேலும் இருபதாந் தீர்த்தங்கரர் காலத்தில் மகா காளாசுரன் என்று சொல்லப்பட்ட ஓரசுரனாலே காலதோஷத்தால் யாகங்கள் உண்டாக்கப்பட்டனவென்றும், இந்த யாகங்கள் உண்டானபின்பு சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்கள் உண்டாயினவென்றும் சொல்லுகிறார்கள்.

இதுவுமல்லாமல், இந்த இந்துதேசத்திலிருக்கப்பட்ட மற்றச் சமயத்தாரெல்லாரும் தொழப்பட்ட சிவன் பிரமன் விஷ்ணு கணபதி சுப்பிரமணியன் முதலாகிய தேவர்களெல்லாரும் முன் சொல்லப்பட்ட தீர்த்தங்கரருக்கு மிகுந்த பக்தர்களாயிருந்தார்களென்று ஜைந வேதங்களிலே சொல்லப்பட்டிருக்கிறபடியால், இந்த ஜைநர்கள் தங்களுக்குத் தொழத்தக்க தெய்வங்களென்று நினையாமல், அருக தேவனுடைய அடியார்களாகையால், இவர்களையும் தாங்கள் ஜைந சமயத்துத் தேவர்களென்றே பாவித்துப் பூசைகளும் ஆராதனைகளும் செய்துவருகிறார்கள்.

இவர்களுடைய கோவில்களும் விக்கிரகங்களும் எந்தக் கிராமங்களிலும் எந்தத் தேசங்களிலும் மண்ணின் கீழேயும் காணப்படுகிறபடியால், இவர்கள் வேதத்தில் சொல்லுகிறபடியே, இந்தச் சமயமே இந்துக்களுக்குள்ளே அநாதியாயிருந்ததென்று எளிதாய்க் கண்டறிமலாம்.

இந்தச் சமயத்தார் சுவேதாம்பரிகள் என்றும் திகம்பரிகள் என்றும் இருவகைப்பட்டிருக்கிறார்கள். இந்த இருதிறத்தாருக்கும் வேதம் ஒன்றாயிருந்தும் சில காரியங்களில் மாத்திரம் ஒவ்வாத விகற்பத்தையுடையவர்களா யிருக்கிறார்கள். சுவேதம்பரிகள் அநேகம் உட்பிரிவையுடையவர்கள். திகம்பரிகளும் சில உட்பிரிவுகளையுடையவர்கள்

வடக்கே இந்தச் சமயத்தார் மிகவும் பிரபலமாயிருக்கிறார்கள். இவர்கள் நடக்கைகளும் ஆசாரங்களும் என்னவெனில்:—யாதோருயிரையும் கொல்லாமலிருப்பதே மிகவும் பெரிதான தர்மம். பொய்சொல்லாமையும், ஒருவருடைய பொருள்களை அபகரியாமையும், ஒருவனுடைய மனைவியை விரும்பாமையும், உலகவஸ்துக்களில் மிதமான ஆசையுடைமையுமாம். இரவில் உண்ணாமை, நீரைவடிகட்டி உண்ணுதல், கள்ளுண்ணாமை, தேனையும் சாராயத்தையும் குடியாமை என்பவை முக்கியமான விரதங்கள். அத்திக்காய், ஆலங்காய், அரசங்காய், கோளிக்காய், இலந்தைக்காய், புடலங்காய், சுரைக்காய், கஞ்சா, அபினி, வெங்காயம், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, காளான் இவை முதலானவைகளையும் மற்றும் அதிக விரையுள்ளவைகளையும் இறந்துபோகும்படியான இக்கட்டடைந்த இடத்திலும் சாப்பிடுவதற்கு மனத்திலேகூட நினைக்க மாட்டார்கள். யாதொரு மாமிசத்தையும் மறந்தும் கையினாலே தொடவுமாட்டார்கள்.

இல்லறத்திலே மோட்சம் இல்லையென்றும் துறவறத்திலேயே மோட்சம் உண்டென்றும் சொல்லுகிறார்கள் ஸ்திரீ ஜென்மத்தில் மோட்சமில்லை என்றும் விலங்கு ஜென்மத்திலும் தேவர்களிலும் நாகர்களிலும் சூத்திரர்களிலும் மோட்சமில்லை என்றும் நிச்சயமாய் நம்பியிருக்கிறார்கள்.

இவர்களுடைய வேதங்கள் இக்காலத்தில் வழக்கமில்லாமலும் முற்காலத்திலும் உபதேசமூலமா யிருந்ததே தவிரப் புத்தகத்தில் எழுதும் வழக்கமில்லாமலும் இருந்தபடியால், அந்த வேதங்கள் பன்னிரண்டிலுமுள்ள சில பொருள்கள் மாத்திரம் எடுத்துப் பிராகிருத பாஷையிலும் சமஸ்கிருத பாஷையிலும், முன்னிருந்த பெரியோர்களாகிய சந்நியாசிகளால் செய்யப்பட்டும், பின்னோர்களாலே படித்துவரப்பட்டும் இருக்கின்றன.

இப்போது வழங்கிவரும் உண்மையுள்ள சாஸ்திர புஸ்தகங்கள்: மகா புராணம, திரிலோகசாரம், கோமடசாரம், பதார்த்தசாரம், ரத்தின கரண்டகம், தர்மபரீட்சை, சிந்தாமணி, சூடாமணி, மேருமந்தரபுராணம், நீலகேசிவாதம், அமரம், சாகடாயனம், நயசக்கரம், சத்தபங்கி, தவளம், விசயதவளம், மகாதவளம், சுபோதினி முதலானவை. தமிழில் மணிமேகலை, குறள், நாலடி, நிகண்டு, நன்னூல், மேருமந்தரபுராணம் முதலானவை.

எல்லா வுயிர்களும் அநாதியான வேதத்திலே சொன்னபடி நடந்து வருவதற்காக வேதத்தை அருளிச்செய்ததே கடவுளின் செயல் என்றும், புண்ணிய பாவங்களைச் செய்வதும் அவற்றின் பயனை அனுபவிப்பதும் மோட்சத்தைப் பெறுவதும் நரகத்தை அடைவதும் உயிர்களுடைய செயல் என்றும், பாவத்தை ஒழிக்கவும் புண்ணியத்தை உண்டாக்கவும் உயிர்களுக்கே வல்லமை உண்டென்றும், இதுவே உறுதியான தத்துவமென்றும் நம்பியிருக்கிறார்கள்

---

## III. THE REV. BOWER'S REMARKS

The ritual of the Jains is as simple as their moral code. The Eti, or devotee dispenses with acts of worship at his pleasure; and the lay votary is only bound to visit occasionally a temple where some of the images of the Tirthankaras are erected, walk round it three times, make an obeisance to the images, with an offering of fruit or flowers, and pronounce such mantras or prayers as:—

Namo Arihantánam, salutation to the Arhats;
Namo Sidhánam, salutation to the pure existences;
Namo Aryánam, salutation to the sages;
Namo Löe Sabha Sahánam, salutation to the devout in the world (the church).

The following morning prayer is also repeated:—

Ichchhami khama, samno bandiyon, jo man jaye nisiaye; máthena vandámi.—I beg forgiveness, Oh Lord, for your slave, whatever evil thoughts the night may have produced.—I bow with my head.

The Jains consider that the command not to kill, even for the use of food, is a prime virtue. They have even succeeded in influencing the minds of orthodox Hindus on this subject.

The Jains believe God, the Vedas, the world, Time, souls, action, and virtue, to be eternal.

The God of the Jainas, their Dévadi Déva, is not acknowledged to be a personal spiritual being, the Creator, the Preserver, the Destroyer, the Legislator, the Judge, the Saviour of the world. Though they acknowledge a divine being, yet they do not worship Him, but pay their devotions to their Saints; or if they do at times worship Him, it is for no benefits that they can expect from Him, since he does not concern himself with the affairs of this world. Beatitude is supposed to be obtained by the acts of the devotee, and not vouchsafed by the grace of the Deity.

The Jains believe Karma, Action, or rather work to be eternal. Fatalism underlies the whole system.

Dharma (virtue, duty, justice, righteousness, rectitude, religion) is said to be the quality of the individual self which arises from action, and leads to happiness and final beatitude. It also means law, and has for its object Dharma, things to be done, Adharma, things to be avoided. This Dharma is said by the Jains to be eternal.

Of the Jaina system it must be said that it is practically 'without God in the world'; for God is represented as neither creating, nor preserving nor saving. The world is eternal, and independent of God. Souls are eternal, and depend upon themselves.

PRINTED AT THE DIOCESAN PRESS, VEPERY, MADRAS.—B. 9464.

*

கிடைக்குமிடம் :
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1

மேலுறை அச்சிட்டது, அப்பர் அச்சகம், சென்னை-1.